பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 12 புதன்கிழமை (28.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 306

# புலிகளின் தூதுக்குழு பயணம் செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தடைவிதிப்பு

## பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கலாம் என்றும் எச்சரிக்கை

லண்டன்,செப்.28

பயங்கரவாத இயக்கப் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெயரையும் இடம்பெறச் செய்யும் பொருட்டு தீவிரமான பரிசீலனையில் இறங்கியிருப்பதாக அறிவித்திருக்கும் ஈ.யூ.என்ற ஐரோப்பிய ஒன்றியம் அதற்கு முன்னோடியாக ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் அங்கத்துவ நாடுகளில் புலிகளின் தூதுக் குழுவினர் பயணங்கள், விஜயங்கள் மேற்கொள்வதற்கும் தடை பிறப்பித்துள்ளனர். இந்தத் தடை உத்தரவு, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

''ஸ்ரீலங்கா ஈ.யூ.பிரகடனம்' என்ற மகுடமிட்டு வெளிவிவகார காமன்வெல்த் அலுவலகத்தால் விடுக்கப்பட்டிருக்கும் அறிக்கை ஒன்றில் இதுபற்றித் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் வன்செயல்களிலும் பயங்கரவாத நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதையிட்டு ஐரோப்பிய ஒன்றியம் தனது கண்டனத்தை இதனால் பிர கடனப்படுத்துகிறது. அரசியல் இலட்சியங்களுக்காக முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத இத்தகைய நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடுவது பேரப்பேச்சுகளின் ஒரு பங்காளிகள் என்ற பெருமைக்கும், அந்தஸ்துக்கும், நம்பகத்தன்மைக்கும் புலிகள் கேடு விளைவிப்பதாகவே இருக்கிறது. ஸ்ரீலங்கா மககளால் பெரிதும் விரும்பப்படும் சமாதான முன்னெடுப்புகளுக்கு பேராபத்தை உண்டாக்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## முதலில் பிரதான சிங்களக் கட்சிகளிடையே இணக்கம்; அதன்பின்

# ஒஸ்லோ, டோக்கியோ உடன்பாடுகளின் அடிப்படையில் தீர்வு என்கிறது ஐ.தே.க.!

## எதிர்பார்க்கப்பட்ட அம்சங்களே அதன் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில்

கொழும்பு, செப்ரெம்பர் 28

**"ஐக்கிய இலங்கைக்குள் சகல இனத்தவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றுக்கு வரக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது.**

**"இனப்பிரச்சினை தொடர்பாக ஐ.தே.கட்சி மற்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இடையே இணக்கப்பாடு உள்ளது. அரசு மற்றும் புலிகள் இடையே இன்னோர் இணக்கப்பாடு உள்ளது. இவைதவிர ஒஸ்லோ உடன்பாடு, டோக்கியோ பிரகடனம் என்பனவும் உள்ளன. இவற்றின் ஊடாக தீர்வை அடையும் வாய்ப்பும் உள்ளது. அதற்கு சர்வதேச சமூகத்தின் முழு ஆதரவும் கூட உண்டு. எனவே, இந்த நடவடிக்கையை நாம் முன்னெடுப்போம்."**

**-இப்படி ஐக்கிய தேசியக் கட்சி தனது ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருக்கின்றது.**

ஐ.தே.கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை அதன் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரும், தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று வெளியிட்டார்.

முதலில் பிரதான கட்சிகள் (ஐ.தே.கட்சி மற்றும் சு.க. ஆகியவை) இரண்டும் தங்களுக்குள் ஒரு நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். நிரந்தர சமாதானம் ஒன்றை எட்டுவதற்கு ஒருபுறத்தில் அரசும் புலிகள் இயக்கமும் தங்களுக்கு இடையேயும் மறுபுறத்தில் இரு பிரதான அரசியல் கட்சிகளும் தங்களுக்கிடையேயும் இணக்கப்பாடு காணவேண்டும்.

முஸ்லிம்களையும் உள்ளடக்கிய பேச்சுகளின்மூலம் இறுதித் தீர்வுக்கு இணங்கிய பின்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டோ சாரதி மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, கல்லடி, திருச்செந்தூரில் ஓட்டோ சாரதியொருவர் இனந்தெரியாத நபர்களால் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இருதயபுரத்தைச் சேர்ந்த தென்னக்கோன் முதியன்ஸலாகே சுனில் (வயது-46) என்பவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டார். (க-3)

## பிரதமர் மஹிந்த வழக்குத் தாக்கல்

கொழும்பு, செப். 28

தமக்கு எதிரான ' ஹெல்பிங் அம்பாந்தோட்டை' விடயம் தொடர்பான விசாரணையை நிறுத்துமாறு உத்தரவிடக் கோரி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்

இந்த மனு இன்று பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பு மனுத் தாக்கலின் பின்பே சு.கவின் தேர்தல் விஞ்ஞாபனம்

### ஜே.வி.பி., ஹெல உறுமய போன்றவற்றைச் சமாளிக்க இப்படித் திட்டம்

கொழும்பு, செப்.28

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுவைத் தாக்கல்செய்த பின்னர் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடத் தீர்மானத்திருக்கிறது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை அப்படியே உள்ளடக்கித் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படவுள்ளதாகவும், அதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட பிரமுகரொருவர் தெரிவித்தார்.

இத்தேர்தலில் சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றைய இரண்டு கட்சிகளான ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றுடன் பல விடயங்கள் அடங்கிய ஒப்பந்தங்களைச்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ.காவின் முடிவு ஓரிரு தினங்களில்!



### தலைவர் ஆறுமுகன் தெரிவிப்பு

கொழும்பு, செப்.28

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவை வழங்குவது என்ற தமது கட்சியின் முடிவை இன்னும் ஓரிரு தினங்களில் தாம் அறிவிக்கவுள்ளார் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் நேற்றுத் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து நேற்றுமுன்தினமிரவு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளால் கைதான 3 பொலிஸாரும் மேலும் ஒரு வார விளக்கமறியலில்!

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதியின்றி பிரவேசித்த போது புலிகளால் கைதுசெய்யப்பட்டு புலிகளின் நீதிமன்றத்தினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள மூன்று பொலிஸாரையும் எதிர்வரும் பதினொராம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

மேற்படி மூன்று பொலிஸாரும் நேற்று கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்றத்தில் தமிழீழக் காவல் துறையினரால் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மூன்று பொலிஸார் கைதுசெய்யப்பட்டமை தொடர்பாக தமிழீழக் காவல்துறையின் பரிசோதகர் பவானி நீதியாளருக்குத் தெரிவித்ததாவது:-

போர்நிறுத்த உடன்பாட்டின்படி எமது கட்டுப்பாட்டு பகுதிக்குள் அனுமதியின்றி உள்நுழைந்தமையானது தவறாகும். 'தவறாக

(15 ஆம் பக்கம் பார்க்க)

## பொம்மைவெளியில் நேற்று பெண் சூட்டுக்கு மரணம்!

யாழ்ப்பாணம் செப்.28

யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண் ஒருவர் கொல்லப்பட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த லீலாவதி ஆனந்தி (வயது 36) என்பவரே கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை தனது வீட்டுக்கு அருகில் உள்ள நீர்க்குழாய் ஒன்றில் தண்ணீர் எடுக்கச் சென்ற சமயம் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு இளைஞர்களில் ஒருவர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச்சென்றுவிட்டார் என்று

(16 ஆம் பக்கம் பார்க்க)



நேற்றுக்காலை மண்டைதீவுப் பகுதிக்கு பொங்குதமிழ் பிரசாரப் பணிகளுக்காகச் சென்ற மாணவர்களை மண்டைதீவு முகாம் முன்னால் கடற்படையினர் தடுத்து வைத்திருப்பதை முதலாவது படத்திலும் மாணவர்கள் கடற்படையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவதை இரண்டாவது படத்திலும் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டத்தலைவர் ஹரிப்பெக்கா, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.கஜேந்திரன், கி.சிவனேசன் ஆகியோர் கடற்படைமுகாம் பொறுப்பதிகாரியுடன் பேச்சுக்கள் நடத்துவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்:பிரபா)

### பொங்குதமிழ் பிரசாரத்துக்குச் சென்றவர்கள்

# மண்டைதீவு முகாம் முன்பாக பலமணி நேரம் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம்,செப்.28

பொங்குதமிழ் எழுச்சிநிகழ்வு பிரசாரப் பணிகளுக்காக நேற்றுக்காலை மண்டைதீவுப் பகுதிக்குச் சென்ற மாணவர்கள் மண்டைதீவிற்கான நுழைவாயிலில் கடற்படையினரால் பல மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டனர்.

கடும் வாக்குவாதங்களின் பின்னர் பிற்பகலில் மண்டைதீவுப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பொங்குதமிழ் பிரசாரப்பணிகளுக்காக யாழ்.தொழில்நுட்ப நிறுவனம்,யாழ்பல்கலைக்கழகம் , தேசியக் கல்வியியற் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திலிருந்து மண்டைதீவு நோக்கிச் சென்றனர்.

இரு பஸ்களிலும் பொங்குதமிழ் பானை ஊர்தியுடனும் சென்றபோது மண்டைதீவிற்குள் செல்லும் பிரதான நுழைவாயிலில் அமைந்துள்ள கடற்படையினரின் சோதனைச் சாவடியில் வைத்து வழிமறிக்கப்பட்டனர்.

இதனையடுத்து மாணவர்களுக்கும் கடற்படையினருக்கும் இடையே முறுகல்நிலை தோன்றியது. பெருமளவில் கடற்படையினர் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

கடற்படையினரின் சோதனைச்சாவடி நுழைவாயிலின் முன்பாக நின்றுகொண்டு தம்மை மண்டைதீவுப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்குமாறு கடற்படையினரிடம் மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்திற்குள் கடற்படையினரின் அனுமதியின்றி எவரும் செல்லமுடியாது என்றும் - அப்படிச் செல்வதென்றால் தாம் கூறும் நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்றும் - கடற்படையினர் தெரிவித்தனர்.

இரு தரப்பினருக்குமிடையில் வாக்குவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அப்குதிக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.கஜேந்திரன் கி.சிவநேசன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் வருகைதந்தனர்.

இவர்கள் அப்பகுதி கடற்படை முகாம் பொறுப்பதிகாரியுடன் நீண்டநேரம் பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

இதற்கிடையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டத் தலைவர் ஹரிபெக்காவும் சம்பவ இடத்திற்கு வருகை தந்து கடற்படை முகாம் பொறுப்பதிகாரியுடன் பேச்சுக்களை நடத்தினார் -

காலை தொடக்கம் பிற்பகல் வரை கொளுத்தும் வெயிலில் மாணவர்கள் காத்து நின்றனர்.

மாணவர்கள் அந்த இடத்திலேயே நின்று பிரசாரப் பணிகளில் ஈடுபட்டனர்.

மாணவர்கள் வழங்கிய பொங்கு தமிழ் பிரசுரங்களை மண்டைதீவுப்பகுதிக்கு எடுத்துச் சென்ற பொதுமக்களிடமிருந்து அவற்றைக் கடற்படையினர் பறித்தெடுத்தனர்.

கடற்படையினர் அனுமதி வழங்கியதையடுத்து பிற்பகல் 2.30 மணிக்கு மண்டைதீவுப் பகுதிக்குச் சென்ற மாணவர்கள் அங்கு பிரசாரப் பணிகளில் ஈடுபட்டனர். (3-7-86)

**"பொங்குதமிழுக்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு"**
**- முழங்குவோம் செப்ரெம்பர் 30 இல்"**

## வடக்கு போக்குவரத்து மத்திய சபையின் கீழ் இன்று மாறுகிறது

உரும்பிராய்,செப்.28

வடபிராந்திய போக்குவரத்துச் சபை இன்று முதல் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் கீழ் இயங்கவிருக்கின்றது.

இதனையொட்டி யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, மன்னார் ஆகிய சாலைகளில் பெயர்ப்பலகைத் திரைநீக்கம் செய்யும் நிகழ்வுகள் இன்று காலை 5 மணிக்கு இடம்பெறவிருக்கின்றன.

யாழ்.பஸ்நிலையத்தில் சாலை முகாமையாளர் மு.சிறிகாந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பதில் பொதுமுகாமையாளர் எஸ்.அருள்சோதிநாதன் வைபவரீதியாகப் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்வார்.

(3-154)

# பாதிக்கப்பட்ட யாழ்.மக்களுக்கு நீதி சரியாகக் கிடைக்க வேண்டும்!

### மேல் நீதிமன்றத்தின் புதிய நீதிபதி உரை

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்.மாவட்டம் ஒரு பாதிக்கப்பட்ட மாவட்டம். இந்த மாவட்டத்தில் வாழும் அனைவருக்கும் நீதி சரியாகக் கிடைக்கவேண்டும் என்பதே எனது விருப்பம்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மேல் நீதிமன்றத்தின் புதிய நீதிபதி எஸ்.தியாகேந்திரன்.

நேற்றுக்காலை புதிய மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பதவியேற்ற பின்னர் யாழ்.மேல் நீதிமன்றில் சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:-

நீதிமன்றங்கள் சமுதாயத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எங்கள் மண்ணில் வாழ்கின்ற ஒரு பகுதியினர் சிறப்புரிமை கிடைக்காமல் உள்ளனர்.

சாதாரண மனிதனுடைய மனதில் நீதிமன்றம் என்றால் மாவட்ட நீதிமன்றம், மேல்நீதிமன்றம் நீதிவான் நீதிமன்றம் என்பனவே நினைவில் வருகின்றன. நீதித்துறையில் இவற்றைவிட இன்னும் வேறு துறைகள் இருக்கின்றன.

சாதாரண - பொருளாதார வசதியற்ற - மனிதன் கீழ் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு செல்கின்றான். பொருளாதார வசதியில்லாததாலேயே அவன் கீழ் நீதிமன்றத் தீர்ப்புடன் செல்கின்றான்.

நீதிமன்றங்களில் வழங்கப்படுகின்ற தீர்ப்புகள் எல்லாம் நேர்மையாக வழங்கப்படவேண்டும். நாடு முழுவதும் எண்பது வீதமான கீழ் நீதிமன்றங்கள் உள்ளன. இவற்றின் பொறுப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

- இவ்வாறு தெரிவித்தார் நீதிபதி தியாகேந்திரன் .

பதவியேற்பு வைபவத்தில் அரச சட்டவாதி செல்வி கந்தசாமி சுகந்தி வாழ்த்துரை நிகழ்தினார்.

முன்னதாக நீதிபதியை நீதிமன்ற உத்தியோகத்தர்கள் மலர்மாலை அணிவித்து வரவேற்றனர். (ஐ-7)



யாழ்.மேல்நீதிமன்ற புதிய நீதிபதி எஸ்.தியாகேந்திரனின் பதவியேற்பு வைபவத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நீதிமன்ற உத்தியோகத்தர் மலர்மாலை அணிவித்து வரவேற்பதையும் நீதிபதிக்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவனும் அரச சட்டவாதி செல்வி சுகந்தினி கந்தசாமியும் வாழ்த்துக் கூறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா)



யாழ்.பொம்மை வெளிப் பகுதியில் நேற்று அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்ட பெண்ணின் சடலத்தை உள்ளே உள்ள படத்திலும் யாழ்.நீதிமன்ற நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சம்பவ இடத்தில் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணை நடத்துவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள் - கவிதரன்)

# இன்றைய ஆட்டங்கள்

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**

✱ ஆனைக்கோட்டை றோமன்கத்தோலிக்க வித்தியாலயம் எதிர் உயரப்புலம் குளமங்கால் வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

✱ இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி எதிர் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

(மானிப்பாய் இந்து மைதானம்)

**14 வயதுப் பிரிவு**

✱ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

✱ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மாதகல் சென்ஜோசப் வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

✱ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மாதகல் சென்.ஜோசெப் வித்தியாலயம்.

(ஹென்றியரசர் கல்லூரி மைதானம்).

(3-86)

## கூடைப்பந்தாட்ட அணி இன்று கொழும்பு செல்கிறது

யாழ்ப்பாணம்,செப்.28

கொழும்பில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள தேசியமட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்.மாவட்ட சிரேஷ்ட கூடைப்பந்தாட்ட அணி இன்று புதன்கிழமை கொழும்பு செல்கின்றது.

கொழும்பு செல்லவுள்ள கூடைப்பந்தாட்ட அணியில் இடம்பெறும் வீரர்களின் விவரம் வருமாறு:-

எஸ்.பிரசன்னா, எம்.சஞ்சீவ், எஸ்.ரமணன், எஸ்.அகிலன், ரி.சிவதாஸ், பி.திவாகரன், எஸ். அருணன்.

எம்.முகுந்தராஜ், எஸ்.தயாளன், எஸ்.கிரிசாந்தன், ரி.சுதாகரன், எஸ்.தேவகரன், எஸ்.சயந்தன், எஸ்.திலக். (3-203)

## அபிஷேகப் பெருவிழா

யாழ்ப்பாணம்,செப்.28

மண்டைதீவு சிறுப்புலம் ஸ்ரீ சுப்பிரமணிய தேவஸ்தான அபிஷேகப் பெருவிழா இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு விசேட அபிஷேகக் கிரியைகளுடன் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் ஆலய முன்னாள் பிரதம குரு அமரர் ஸ்கந்த பாலசுப்பிரமணியக் குருக்களின் புதல்வன் சிவஸ்ரீ சபாரத்தினக் குருக்கள் ஆலய அறங்காவலரால் கௌரவிக்கப்படவுள்ளார். நிறைவில் ஆலய ஓதுவார்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(3-12)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## விட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்க ரணில் விக்கிரமசிங்க தயாரா?

இலங்கையில் முக்கியமான ஓர் அரசியல் திருப்பு முனைச் சந்தியிலே ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகின்றது.

தனக்குள் முரண்பட்டு நின்ற தமிழ்ச் சமூகம் - தமிழ்த் தேசியம் - தமிழ்த் தேசம் - இன்று தேசியப் பற்றுணர்வால் ஒன்றிணைந்து, ஒரு சக்தியாக அணிதிரண்டு, தனது வரலாற்றுத் தாயகத்தில் தன்னைத் தானே ஆளும் சுயாட்சி உரிமைகோரி - சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி - நிற்கின்றது.

அமைதி வழியில் - சமாதான முறையில் - பிணக்குக்கு இணக்கத் தீர்வு காண வாய்ப்பளித்து, யுத்தநிறுத்தம் செய்து கடந்த சுமார் நாலரை ஆண்டுகளாகத் தமிழினம் காத்து நிற்கிறது. கிணற்றில் போட்ட கல்லாகத் தேங்கிப் போய்க் கிடக்கும் அமைதி முயற்சிகள் - சமாதானப் பேச்சுகள் - தீர்வுக்கான எத்தனங்கள் - முன்நகர்த்தப்படாமல் அடைபட்டு, அடிபட்டுப் போய்க் கிடக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில்தான் தென்னிலங்கை அரசுக்கு அடுத்துத் தலைமை வகிக்கப் போகின்ற நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் இப்போது வந்திருக்கிறது.

இந்த வாய்ப்பான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ஆக்கபூர்வமான - இணக்கமான - தீர்வு ஒன்றுக்குப் பெரும்பான்மைச் சிங்களவர்கள் உட்பட நாட்டின் அனைத்து மக்களிடமும் ஓர் அங்கீகாரத்தைப் பெறுவதை விடுத்து, இந்தத் தேர்தலிலும் பேரினவாதத்தைக் கிளப்பி, இனவாதம் மூலம் ஆட்சியைப்பிடிக்க கங்கணம் கட்டி நிற்கின்றன தென்னிலங்கை அரசியல் தலைமைகள்.

அரசியல் சுயலாப இலக்கில் - காலங்காலமாகத் தாம் பின்பற்றிவரும் பேரினவாதப் போக்கை தென்னிலங்கைத் தலைமைகள் மீண்டும் கையில் தூக்கியிருப்பது இந்த இலங்கைத் தீவின் இரு பெரும் தேசியஇனங்களுக்கு இடையில் - இருபெரும் தேசியங்களுக்கு மத்தியில் - நல்லிணக்கமும், சமரச சகவாழ்வும், புரிந்துணர்வும் ஏற்படுவதற்கான இறுதி வாய்ப்புகளையும் தகர்த்து அவற்றை சாத்தியமற்றதாக்கியிருக்கின்றது என்றே கூறவேண்டும்.

சிங்கள அரசியல் தலைமைகள் புரியும் இந்த வரலாற்றுத் தவறு, இலங்கைத் தீவில் இனங்களின் ஒருமைப்பாட்டிற்கான நம்பிக்கைகள் அனைத்தையுமே சிதறடித்து தீவை ஒரு குழப்பகரமான திசைக்கு இட்டுச் சென்றிருக்கின்றது.

தமது தேர்தல் வெற்றிக்காக பேரினவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து, சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்கள் மீது பெரும்பான்மைச் சிங்களவர்கள் கொண்டுள்ள காழ்ப்புணர்வை வெளிப்படுத்தும் விதத்திலான விடயங்கள் அடங்கிய ஒப்பந்தத்தை, அந்தப் பேரினவாதிகளுடன் செய்திருக்கின்றார் பிரதமர் மஹிந்த.

ஆளும் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் குதித்துள்ள பிரதமர்தான் இவ்வாறு பேரினவாதிகளை முன்நிறுத்தி அந்தக் கோலாகலத்தில் வாக்குத் திரட்ட எத்தனிக்கின்றார் என்று பார்த்தால், எதிரணியில் நிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டும் அதற்கு வேறானவர் அல்லர் என்றுதான் தம்மைக் காட்டப் பார்க்கின்றார் போலும்.

ஏற்கனவே தமிழர் தரப்பின் ஏக - அதிகாரப்பூர்வ - பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தற்போதைய அமைதி முயற்சிகளை ஆரம்பித்தவர் ரணில் விக்கிரமசிங்க. அவர் பிரதமராக இருந்த காலத்தில் அம்முயற்சிகள் நடந்தன.

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த யோசனை குறித்து பரிசீலிக்க அவரது அரசு தயார் என அறிவித்த கையோடு, ரணிலின் அரசிடமிருந்து மூன்று முக்கிய அமைச்சுக்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பறித்தார். அத்தோடு அந்த அமைதி முயற்சி தேங்கிப் போயிற்று என்பது நாமறிந்த விடயம்.

ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வென்று ஜனாதிபதி என்ற பதவியோடு அதிகாரத்துக்கு மீண்டும் வருவாரானால் தடைப்பட்டுப் போன இந்த அமைதி முயற்சிகளை விட்ட இடத்திலிருந்து - அதாவது இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடயத்திலிருந்து - தொடங்குவாரா என்பதே பிரதான கேள்வியாகும்.

ஆனால், அவர் நேற்று வெளியிட்ட தமது ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இதுகுறித்து திட்டவட்டமான - தெளிவான -பதில் ஏதும் இல்லை. ஒஸ்லோ இணக்கப்பாடு, டோக்கியோ பிரகடனம் என்று பத்தையும் , பலதையும் கூறிக் குழப்பியிருக்கிறார் அவர்.

டோக்கியோ பிரகடனத்தில் இடைக்கால நிர்வாகம் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதால், அந்தப் பிரகடனத்தின் அடிப்படையிலும் தீர்வு என்று கூறியதன் மூலம் இடைக்கால ஏற்பாட்டை ரணில் ஏற்றுக்கொண்டுள்ளார் என்றுதானே அர்த்தம் என எவரும் வாதிடலாம்.

ஆனால், இன்றைய நிலையில் ரணில், மஹிந்த போன்ற ஜனாதிபதி வேட்பாளர்களிடம் மக்கள் எதிர்பார்ப்பது திட்டவட்டமான பதிலையேயன்றி சுற்றிவளைத்து அமைந்த மழுப்பல்களை அல்ல.

அமைதிப் பேச்சுகளை தேங்கிய இடத்திலிருந்து - விட்ட இடத்திலிருந்து - அதனைத் தொடர ரணில் தயாரா?

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் குறித்துப் பேசத் தயார் என 2003 நவம்பர் முதல் வாரத்தில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்த நிலையில் அமைதிப் பேச்சுகள் தடைப்பட்டன. ரணில் ஜனாதிபதியானால் அந்த இடத்திலிருந்து சமாதான முயற்சிகளைத் தொடர அவர் தயாரா? அவரின் தெளிவான பதில் இதற்கு அவசியம்.

# எரிபொருள் விலை உயராதிருக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை!

### திறைசேரிச் செயலாளர் தகவல்

கொழும்பு, செப்.28

உலக சந்தையில் தொடர்ச்சியாக மசகு எண்ணெய்யின் விலை அதிகரித்து வந்துள்ளபோதிலும் எரிபொருள்களின் விலைகளை அரசு அதிகரிக்காது என்று திறைசேரியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

உலக சந்தை விலைகளுக்கு ஏற்ப இலங்கையில் எரிபொருள்களின் விலை அதிகரித்துச் செல்லுமாயின், போக்குவரத்துத் துறையில் மாத்திரமின்றி ஏனைய துறைகளிலும் பெரும் பிரச்சினைகள் உருவாகுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இத்தகைய நிலைமையைத் தவிர்க்கும் வகையில் எரிபொருள்களுக்கு நிலையான விலைகள் நிலவக் கூடியதாக அரசு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், எரிபொருள்களின் விலைகள் அடிக்கடி அதிகரிக்கப்படுவதால் நுகர்வோருக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கும் நடவடிக்கையாக இனங்காணப்பட்டுள்ள துறைகளுக்கு அரசு சலுகைகளை வழங்க முன்வந்துள்ளது எனவும்-

அத்தியாவசியத் துறைகளுக்கு குறிக்கப்பட்ட சலுகைகள் வழங்கப்படுவதன் மூலம் எரிபொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாக உருவாகும் பொருளாதாரப் பாதிப்புகளை குறைத்துக் கொள்ளமுடியும் எனவும் - அவர் மேலும்தெரிவித்துள்ளார். (ஒ-206)

## மீண்டும் இ.போ.ச.

உரும்பிராய், செப்.28

வடபிராந்திய போக்குவரத்துச் சபை இன்று புதன்கிழமை முதல் இலங்கை போக்குவரத்துச் சபைக்குள் உள்ளீர்க்கப்படுகிறது.

ஆரம்பத்தில் இலங்கை போக்குவரத்துசபையின்கீழ் அரசின்பொது போக்குவரத்துச் சேவை நடத்தப்பட்டது. பின்னர் பிரதேச ரீதியாக அது பிரிக்கப்பட்டது. அதன்படி வடபிராந்திய போக்குவரத்துச் சபை உருவானது.

தற்போது பிராந்திய சபைகளை இணைத்து இலங்கை போக்குவரத்துச் சபையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (ஒ)

## அஞ்சல் ஊழியருக்கான பரீட்சையை யாழில் நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.28

அஞ்சல் திணைக்கள சிற்றூழியர்களின் பதவி உயர்வுக்கான நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்துமாறு அஞ்சல்மா அதிபரிடம் ஸ்ரீலங்கா தபால் தொலைத் தொடர்புச் சேவைச் சங்கத்தின் வடபிரதேசக் கிளை கோரியுள்ளது.

மேற்படி நேர்முகப் பரீட்சையை நாளை வியாழக்கிழமை கொழும்பில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சையில் தோற்றும் வடபகுதியைச் சேர்ந்த ஊழியர்களுக்குப் போக்குவரத்தால் ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் முகமாக அவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-13)

# நியமனக் கடிதத்தில் உள்ளபடியே ஆசிரியர்களுக்குப் பணி ஒதுக்கீடு

### வலயக் கல்விப்பணிப்பாளர் வலியுறுத்து

வலி.தெற்கு, செப்.28

அண்மையில் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு அவர்களின் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணியே ஒதுக்கப்படவேண்டும். அவ்வாறு ஒதுக்க முடியாத அல்லது மேலதிகமாக உள்ள ஆசிரியர்களின் விவரங்களை உடனடியாக அறிவித்தால் அவர்களுக்கு வேறு பாடசாலைகளில் நியமனம் வழங்கலாம்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் பாடசாலை அதிபர்களுக்கு இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

உடுவில்,சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் சுமார் 200 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பாடசாலை ஆசிரிய ஆளணியினரின் எண்ணிக்கை 2003/32 ஆம் இலக்க சுற்றுநிருபத்துக்கமைவாக இருக்கவேண்டும். அதற்கு மேலதிகமாக ஆசிரியர்களை வைத்திருந்தால் நிறுவன தலைவரிடமிருந்தே அவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் மீளப்பெறப்படும். எனவே, ஆளணியினரின் தொகையை சுற்றுநிருபத்துக்கமையப் பேணவேண்டும் என ப.விக்கினேஸ்வரன் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (ஒ-152)

## நல்லூர் உற்சவத்தில் மீட்டபொருள்கள் இன்று ஒப்படைப்பு

வலி.வடக்கு, செப்.28

நல்லூர் ஆலய உற்சவத்தின்போது கண்டெடுக்கப்பட்ட மற்றும் திருடர்களிடம் இருந்து மீட்கப்பட்ட தங்கநகைகள் உள்ளிட்ட பெறுமதிமிக்க பொருள்கள் இன்று பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் வைத்து உரியவர்களிடம் வழங்கப்படவுள்ளன.

பொருள்களைத் தவறவிட்டவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து பொருள்களை அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளும்படி சிறப்புச் செயலணியினர் கேட்டுள்ளனர். (ஒ-86)

# வெள்ளை வானில் வந்தோரால் சிறுமி கடத்தப்பட்டு விடுவிப்பு!

### கைதடிப் பகுதியில் பரபரப்பு

கைதடி,செப்.28

பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த சிறுமியை வெள்ளைவானில் வந்தவர்கள் கடத்திப் பின்னர் விடுவித்த சம்பவம் கைதடிப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நாலாம் ஆண்டில் கல்வி பயிலும் கைதடி கிழக்கு, இராசபுரியைச் சேர்ந்த சிவலிங்கம் பானுப்பிரியா (வயது 9) என்ற சிறுமியே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டு பின் விடுவிக்கப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் காலை வீட்டிலிருந்து பாடசாலைக்கென நடந்து சென்று கொண்டிருந்த சிறுமியை கைதடி கிழக்கு வீதியில் வைத்து வெள்ளை நிற 'ஹயஸ்' வாகனத்தில் வந்தவர்கள் பாடசாலையில் இறக்கி விடுவதாகக் கூறி ஏற்றினார்கள். ஆனால், பாடசாலையைத் தாண்டி வாகனம் சென்றதால் சிறுமி தன்னை அங்கு இறக்கிவிடுமாறு கூறினாள். வாகனத்தில் இருந்தோர் சத்தமிட்டால் கத்தியால் குத்திவிடுவோம் என மிரட்டினர். ஆனாலும், சிறுமி அச்சம் கொள்ளாது சத்தமாக அலறினாள். இதனையடுத்து கைதடி வயோதிபர் இல்லம் முன்பாக சிறுமியை இறக்கி விட்டு வாகனத்தில் வந்தோர் சென்றுவிட்டனர்.சிறுமி வயோதிபர் இல்லத்தில் கடமை புரியும் தனது உறவினரிடம் சென்று நடந்ததைக் கூறினாள்.

இதனிடையே இச்சம்பவத்தை அறிந்த பலர் அச்சம் கொண்டு பாடசாலை சென்று தமது பிள்ளைகளை உடனடியாக வீட்டிற்குக் கூட்டிச் சென்றனர். இச்சம்பவத்தால் கைதடிப் பகுதியில் பரபரப்பு நிலவியது. (ஒ-75)

### உதாவாக்கு

**நேற்று பற்றிய மறுசீலனைகளிலும் நாளை பற்றிய கற்பனைகளிலும் நேரத்தை வீணாக்காமல், இன்றைய பணிகளில் கவனம் செலுத்தவும்.**

**- காப்மேயர்.**

### நாளை

புரட்டாதி 12
வியாழக்கிழமை
29.09.2005
திதி: ஏகாதசி
காலை 09.41 வரை
நட்சத்திரம்: ஆயிலியம்
முன்னிரவு : 10.07 வரை
சுபநேரம்: 07.32 - 09.02
ராகுகாலம்: 01.32 - 03.02
(யாவும் பழைய நேரப்படி)



## ஆஸ்பத்திரிக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி,செப்.28

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் இந்த உபகரணங்களை டாக்டர் ச.அம்பிகைபாகனிடம் கையளித்துள்ளார். அவசர நோயாளர்களுக்குப் பயன்படுத்தும் கட்டில், சக்கர நாற்காலி மற்றும் மருத்துவ உபகரணங்கள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (9-117)

## மதிப்பீடு

சாவகச்சேரி,செப்.28

சாவகச்சேரி நகரை நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கட்டியெழுப்ப சுமார் 7780.1 மில்லியன் ரூபா தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரைப்போல முல்லைத்தீவு நகரமும் புனரமைக்கப்படவுள்ளது. இப்புனரமைப்புப் பணிகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

(9-31)

**தாதியர் பயிலுநர் தேவை**

எமது வைத்திய நிலையத்தில் பணிபுரிய தாதி பயிலுநர்கள் தேவைப்படுகின்றனர். சங்கானைக்கு அண்மையில் உள்ள கிராமங்களைச் சேர்ந்தோர் விரும்பப்படுவர்.

தொடர்பு:

**கருணா கிளினிக்**

பிரதான வீதி, சங்கானை.

(40503) (21.19)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

மேற்படிப்பு வெளிநாடு செல்வோருக்கான விசேட ஆங்கிலப் பேச்சுப்பயிற்சி By: விக்னேஸ்வரன்

ஆச்சாரி 426 (302), K.K.S .வீதி, யாழ்ப்பாணம்.

(40509)(21-19)

# நான்கு மாணவருக்கும் கௌரவம்

யாழ்ப்பாணம், செப்.28

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் தேசிய மட்டத்தில் சாதனை படைத்த யாழ்.இந்துக் கல்லூரியின் நான்கு மாணவர்கள் நேற்று தங்கப்பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ்.இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த மேற்படி கௌரவிப்பு நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் து.வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், பேராசிரியருமான பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் என்.குகபாலன், மற்றும் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டு சாதனைபடைத்த மாணவர்களைப் பாராட்டியதுடன் தங்கப் பதக்கம் அணிவித்தும் கௌரவித்தனர். (9-13)

**அனைவருக்கும் புலமைப்பரிசில்**

**COMPUTER EXPRESS**

**Institute of Information Technology**

**புலமைப்பரிசில் திட்டம் - 2005**

**80% OFF**

| பாட நெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4மாதம் | 6,000 | 1,200 |
| Honours Diploma in Computer Science | - 6மாதம் | 8,000 | 1,600 |
| Diploma in Webpage Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Desktop Publishing | - 4 மாதம் | 5,000 | 1,000 |
| Diploma in Hardware Engineering | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| MS Office | - 3 மாதம் | | 500 |

**Advances Courses**

**50% OFF**

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

October 03ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்

Batch II - 23/09/2005
Batch III - 24/09/2005
Batch IV - 25/09/2005
Batch V - 02/10/2005

Maniyam Building

இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)

021-2228250, 0777 222422, 077 3151647


## யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - சுவிற்ஸர்லாந்து



**சிவப்பிரகாசம் மயூரன்**
(கணிதம் முதலாம் நிலை)



**பொன்னுத்துரை சிவபாலன்**
(உயிரியல் 2 ஆம் நிலை)



**நாகேந்திரம் பானுகோபன்**
(கணிதம் 4 ஆம் நிலை)



**சபாநாதன் தனேசன்**
(கணிதம் 5 ஆம் நிலை)

# வாழ்த்துகின்றோம்

நடைபெற்று முடிந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக மீண்டும் ஒரு தடவை தமிழர் திறமையினை வெளிக்காட்டிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களான சிவப்பிரகாசம் மயூரன், பொன்னுத் துரை சிவபாலன், நாகேந்திரம் பானு கோபன், சபாநாதன் தனேசன் இவர்களை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் சுவிஸ் கிளை பெருமகிழ்வுடன் வாழ்த்துகின் றது.

இம்மாணவர்களுக்கான கௌரவிப்பும் பணப்பரிசில் வழங்கும் நிகழ்வும் இன்று (28.09.2005) புதன் கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்-
சுவிற்ஸர்லாந்து

J.C.C. Ex Schuler Swiss
Post Fach 102,
4716 Welchenrohr
Switzerland.
Tel.: 0041 78 890 2784
E-Mail : j-c-c-exstudent-swiss@hotmail.com

நாகராஜா விஜயகுமார்
தலைவர்.

"மத்தியின் மணிக்கொடி என்றும் தாழ்வுபெறாது"







வன்னியில் சில பகுதிகளில் இடம்பெற்ற தியாகி திலீபனின் நினைவுதின நிகழ்வுப் படங்களை இங்கு காணலாம். முழங்காவில் பிரதேசத்தில் உள்ள தமிழீழ வைப்பகத்தில் நடைபெற்ற திலீபன் நினைவுதின நிகழ்வில் வைப்பக முகாமையாளர் மலரஞ்சலி செய்வதையும் அருகில் பணியாளர்கள் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.
முழங்காவில் மாவீரர் பொதுமண்டபத்தில் வர்த்தக சங்கத்தினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் தேசியக் கொடி ஏற்றப்படுவதையும் மலரஞ்சலி செலுத்தப்படுவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள் : ச.உதயன், வெள்ளாங்குளம் செய்தியாளர்)

## கண்டாவளையில் அபிவிருத்திப் பணிகள்

பரந்தன்,செப்.28

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 6 கிராமங்களில் நியாப் II திட்டத்தின் கீழ் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தருமபுரம் மேற்கு, மயில்வாகனபுரம், குமரபுரம், பெரியகுளம், கல்மடுநகர், நாவல் நகர், குமாரசாமிபுரம் ஆகிய ஆறு கிராமங்களிலுமே அபிவிருத்தி வேலைகள் நடைபெறவுள்ளன என கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

முதல் கட்டமாக கிணறு,பொதுமண்டபம் என்பன நிறுவப்பட்டுவருவதாகவும் கூறப்பட்டது. (எ-352-202)

## வட்டக்கச்சிப் பகுதியில் 'போருக்கான இறுதி அழைப்பு'

வட்டக்கச்சி,செப்.28

'போருக்கான இறுதி அழைப்பு' நிகழ்வுகள் வட்டக்கச்சிப் பிரதேசத்தில் சிறப்புற முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 18ஆம் திகதி தொடக்கம் தினமும் மாலை 6மணிக்கு வட்டக்கச்சியில் இறுதி அழைப்புக்கான தீப்பந்த ஊர்வலம் நடைபெற்று வருகின்றது. வட்டக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் பிரதேச இளைஞர்களால் இந்த ஊர்வலம் நடத்தப்படுகின்றது.

இந்நிகழ்வில் தமிழீழ நிர்வாக சேவையின் துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன், வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடர் ஆகியோரும் கலந்து சிறப்பித்து வருகின்றனர். (த-405-202)

## பள்ளிக்குடா வீதி புனரமைப்பு

பூநகரி,செப்.28

பள்ளிக்குடாவின் பிரதான வீதியைப் பள்ளிக்குடாக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் புனரமைத்து வருகின்றது.

சுமார் 3 கிலோமீற்றர் நீளமான இவ்வீதி பல ஆண்டு காலமாகப் புனரமைக்கப்படாது காணப்படுகிறது. 20 வருடங்களின் பின்னர் ஒரு கிலோமீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்பட்டது. ஏனைய 2 கிலோமீற்றர் நீளமான வீதியைப் புனரமைப்பதற்கு மேற்படி சங்கம் முன்வந்து பணியை மேற்கொண்டு வருகின்றது.

மழை காலத்தில் இவ்வீதியில் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (த-403-202)

## நாட்டுப்பற்றாளர் கௌரவம்

புதுக்குடியிருப்பபு, செப்.28

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பலியான முல்லைத்தீவு வட்டுவாகலைச் சேர்ந்த அன்னலிங்கம் சுவர்ணலிங்கம் என்பவர் நாட்டுப்பற்றாளராகக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான அஞ்சலிக்கூட்டம் ஒன்று கடந்த 20 ஆம் திகதி வட்டுவாகல் அ.த.க. பாடசாலையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அ.மரியராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பொதுச் சுடரினை முல்லைத்தீவு மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் மா.ரங்கன் ஏற்றினார்.

திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரை அவரது தாயார் ஏற்றி வைத்தார். மலர் மாலையினை அவரது மனைவி அணிவித்தார். மலர் வணக்கத்தினை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஆரம்பித்துவைத்தார்.

நினைவுரைகளை மா.ரங்கன், கடற்புலிகளின் தளபதி தினேஸ், பாடசாலை அதிபர் அல்வீனுப்பிள்ளை, கிராம சேவையாளர் தியாகராசா, வர்த்தக சங்கத் தலைவர் ந.மனோ ஆகியோர் நிகழ்த்தினர். (த-353-202)

# உலக வங்கியின் வீடமைப்புத்திட்ட முதற்கட்டப் பணிகள் ஆரம்பம்

பரந்தன்,செப்.28

கிளிநொச்சி மாவட்டத்தில் உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 5 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 22 கிராமங்களில் இந்தப் பணிகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் குமரபுரம், காஞ்சிபுரம், கோரக்கன்கட்டு, உமையாள்புரம் ஆகிய கிராமங்களிலும் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் மரையாளபுரம், கிருஷ்ணபுரம், விநாயகபுரம், தொண்டமான் நகர், செல்வா நகர், ஜெயந்தி நகர் ஆகிய கிராமங்களிலும் -

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் மட்டுவில்நாடு வாடியடி, மட்டுவில்நாடு வில்லடி, பள்ளிக்குடா, ஞானிமடம், கௌதாரி முனை, மட்டுவில்நாடு நெற்புலவு ஆகிய கிராமங்களிலும் -

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் தர்மக்கேணி, பேராவை தர்மக்கேணி, முகாவில், ஊர்வணிப்பற்று, கோவில் வயல், சங்கத்தார் வயல் ஆகிய கிராமங்களிலும் வீடுகள் நிறுவப்படுகின்றன. (எ-352-204)




# தருமபுரம் ம.வி. மாணவருக்கு வீதி ஒழுங்கு குறித்த பயிற்சி

## இன்று முதல் 5 நாள்களுக்கு காவல்துறையினர் நடத்துவர்!

வட்டக்கச்சி, செப்.28

கிளிநொச்சி தருமபுரம் மகாவித்தியாலய மாணவர்களுக்கு வீதி ஒழுங்கு தொடர்பான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

தமிழீழ காவல்துறையின் நகரப்போக்குவரத்துப் பிரிவின் ஏற்பாட்டில் இன்று புதன் கிழமை தொடக்கம் தொடர்ந்து 5 நாள்களுக்கு இப்பயிற்சி வகுப்புகள் நடை பெறவுள்ளன.

தமிழீழக் காவல்துறையின் நகரப்போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் தலைமையிலான குழுவினரால் நடத்தப்படவுள்ள இப்பயிற்சி வகுப்பு முடிவுற்றதும் காவல்துறை உறுப்பினர்களுடன் மாணவர்களும் இணைந்து பாடசாலை முன்வீதியில் வீதி ஒழுங்கு நடவடிக்கையில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-405)

# புதிய இனச் சோளச் செய்கையில் முத்தையன்கட்டு விவசாயி வெற்றி!



புதிய இனச் சோளப் பயிருடன் அதனை உற்பதிசெய்த விவசாயி காணப்படுகிறார்.

ஒட்டுசுட்டான்,செப்.28

சிறுபோக காலத்தில் முத்தையன்கட்டைச் சேர்ந்த விவசாயி ஒருவரால் உற்பத்தி செய்யப்பட்ட புதிய இன சோளப் பயிர் நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளது. இந்தச் சோளப் பயிரின் அறுவடை விழா சமீபத்தில் நடந்தது.

முத்தையன்கட்டு, வலதுகரை 2ஆம் கண்டத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சந்திரசேகரம் என்பவரால் இப்புதிய இனச் சோளம் பயிரிடப்பட்டது.

விவசாயப் போதனாசிரியர் லக்ஸ்மணின் தலைமையில் நடைபெற்ற அறுவடை விழாவில் பாடவிதான உத்தியோகத்தர், ஒட்டுசுட்டான் விவசாயப் போதனாசிரியர் ஜெயராசா,கிராம சேவை அலுவலர் சோமசுந்தரம், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

'பிசுபிக்' என்ற பெயருடைய இந்தப் புதிய இனச் சோளத்தைப் பயிரிட்டு சிறந்த அறுவடையைப் பெற்றதைப் பாராட்டி இந்த விவசாயிக்கு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சூரிய மின்கலம் ஒன்றை பரிசாக வழங்கி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-341-202)

# ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு

புதுக்குடியிருப்பு, செப்.28

முல்லைத்தீவு வலய ஆசிரியர்களுக்கான ஆசிரியர் வாண்மை விருத்திச் செயலமர்வு கடந்த 21ஆம் திகதி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் ஆரம்பமானது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.சிவராசா தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தனும் வலயக் கொடியை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.நாகரத்தினமும் ஏற்றிவைத்தனர்.

நிகழ்வில் செ.முகுந்தன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா, மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் கா.சுகுமாரின் நெறிப்படுத்தலில் செயலமர்வு இடம்பெற்றது. (த-353-202)

## பூநகரிப் பிரதேசத்தில் உள்ளூராட்சி வாரப் பணிகள்

பூநகரி, செப்.28

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பூநகரிப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் பலவேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பூநகரிப் பிரதேச சபையைச் சேர்ந்த ஆயுள்வேத வைத்திய அதிகாரி எம்.ஜி. தில்லைநாயகம் தலைமையிலான குழுவினரால் செக்காலை, அரசபுரம் ஆகிய கிராமங்களில் நடமாடும் மருத்துவசேவை நடத்தப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்கிடையேயான பொது அறிவுப்போட்டி, கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகளுக்கான போசாக்குப் பால்மா வழங்குதல் போன்ற பணிகளும் இடம்பெற்றன. (த-403-202)

## முன்பள்ளிக் கலைவிழா

ஒட்டுசுட்டான்,செப்.28

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும் வலயக் கல்வி ஆதரவுடனும் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஒழுக்கமைப்புடனும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களால் நடத்தப்படுகின்ற முன்பள்ளிகளின் சிறார்களின் கலை விழா அண்மையில் மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

துணுக்காய் பிரதேச முன்பள்ளி அபிவிருத்தி இணைப்பாளர் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கள விளக்கினை வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.பரந்தாமன், மாங்குளம் மகா வித்தியாலய முதல்வர் திருமதி விஜயகுமார், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கௌரி கிருபாகரன், மாங்குளம் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சு.திருச்செல்வம் ஆகியோர் ஏற்றினர்.

இவ்விழாவில் 11 முன்பள்ளிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த-341)

## இலங்கை வங்கியால் சிறார்கள் கௌரவிப்பு

இலங்கை வங்கியின் முல்லைத்தீவுக் கிளையின் 2004ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி வி.காயத்திரியையும் வங்கியில்' பொன் அரும்பு' கணக்கு வைத்திருக்கும் சிறார்களையும் இலங்கை வங்கி கௌரவித்துள்ளது.

இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த 18ஆம் திகதி புதுக்குடியிருப்பில் நடைபெற்றது.

முல்லைத்தீவுக் கிளை முகாமையாளர் க.லட்சுமணசர்மா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.நாகரத்தினம்,வன்னிப் பிராந்திய முகாமையாளர் ச.திருச்செல்வம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (த-353-202)

## கல்விச் செயற்பாடு குறித்த ஆய்வு மாநாடு

புதுக்குடியிருப்பு,செப்.28

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் கல்விசார் செயற்பாடுகளின் ஆய்வு மாநாடு கடந்த 16ஆம் திகதி இடம்பெற்றது.

வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் நடைபெற்ற இம்மாநாட்டிற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் இ. தண்டாயுதபாணி தலைமை வகித்தார்.

இம்மாநாட்டில் 'வவுனியா வடக்கு வலயம் அபிவிருத்தியும் ஆய்வும்' என்னும் தலைப்பில் பத்து ஆய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன் மற்றும் வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி உட்படப் பலர் இதில் கலந்துகொண்டனர். (எ-353-202)

# தென்னையைத் தாக்கும் 'மைற்ஸ்' நோயை கட்டுப்படுத்தும் கழிவு 'ஓயில்' கரைசல்

**யாழ்.** குடாநாட்டில் தென்னை மரங்களில் 'மைற்ஸ்' நோயின் தாக்கம் அதிகரித்து வருகிறது.

யாழ். கமநல சேவைகள் திணைக்களம், தென்னை ஆராய்ச்சி நிறுவனம் போன்றவை காலத்துக்குக் காலம் இந்த நோயைக் கட்டுப்படுத்த பல்வேறு தடுப்பு முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளன. இருப்பினும் 'மைற்ஸ்' நோயின் தாக்கம் குறைவதாக இல்லை.

'மைற்ஸ்' உண்ணிகளின் தாக்கத்தினால் தேங்காயின் உற்பத்தி குறைவடைந்து அதன் காரணமாக தேங்காயின் விலையும் அதிகரித்து வருகின்றது. ஒரு சில தென்னை மரங்களை வீட்டுத்தோட்டத்தில் வைத்து வளர்த்து அதன் மூலம் தமது அன்றாடத் தேங்காய்த் தேவையைப் பூர்த்திசெய்துவரும் யாழ்ப்பாண மக்களுக்கு இந்த நோயின் தாக்கம் பெரும் பாதிப்பை ஏற்படுத்திப் பொருளாதார ரீதியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

*தடுப்பு முறை*

உள்ளிக் கரைசலை உபயோகிப்பதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடியும் என கமநலசேவை நிலையம், தென்னை ஆராய்ச்சி நிலையம் போன்றன மக்களுக்கு ஆலோசனைகள் வழங்கி வந்துள்ளன. ஆனால், உள்ளிக் கரைசலைத் தயாரிப்பதும் அவற்றை மரங்களுக்குப் பிரயோகிப்பதும் கஷ்டமான வேலையாக இருப்பதால் அநேகமாக மக்கள் இம்முறையினை உபயோகிக்க முன்வரவில்லை.

யாழ். குடாநாட்டில் 'மைற்ஸ்' நோயின் தாக்கம் கட்டுப்படுத்த முடியாதிருப்பது பற்றி தென்னை ஆராய்ச்சி நிலையமும் கமநல சேவைகள் திணைக்களமும் தேசிய தென்னைப் பயிர் ஆராய்ச்சி மையத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளன.

தேசிய தென்னை ஆராய்ச்சி நிலையம் 'மைற்ஸ்' உண்ணிகளைப் பிடித்து உணவாக்கிக் கொள்ளும் ஒருவகைப் பூச்சியினத்தை வளர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதனால், யாழ்ப்பாணத்துக்கு எந்தளவிற்குப் பயன் கிடைக்கும் என்பதைக் கூறமுடியாதுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



'மைற்ஸ்' உண்ணிகளைப் பூச்சிகள் மூலம் அழிக்கும் நிலைமை யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அறிமுகப்படுத்தப்படும் வரை, ஒரு புதிய கட்டுப்பாட்டு முறையை யாழ்ப்பாண தென்னை அபிவிருத்திச் சபையினர் அறிமுகப்படுத்தி உள்ளனர் என அச்சபையைச் சேர்ந்த உத்தியோகத்தர் எஸ்.சத்தியேந்திரா தெரிவித்துள்ளார்.

*கழிவு ஒயில் பிரயோக முறை*

யாழ். தென்னை வள அபிவிருத்திச் சபையினர் 'மைற்ஸ்' நோயைக் கட்டுப்படுத்துவதற்காக ஆகப் பிந்திய கட்டுப்பாட்டு முறையாகக் கழிவு ஒயில் பிரயோக முறையை அறிமுகப்படுத்தி உள்ளனர்.

கழிவு ஒயில் கொண்டு தயாரிக்கப்படும் கூழ்க்கரைசலைத் தேங்காய்கள், குரும்பட்டிகள் (அவை இளம் குரும்பட்டிகளாயிலும் சரி, முதிர் தேங்காய்களானாலும் சரி) போன்றவற்றின் மூள்கள் மீது பூசிவிடவேண்டும்.

கழிவு ஒயில் கூழ்க் கரைசலைத் தயாரிப்பதற்கு 300 மில்லிலீற்றர் பாவித்த எஞ்சின் ஒயில் தேவை. 6 கிராம் கோதுமை மாவும், 6 கிராம் சவர்க்காரமும் தேவை.

மோட்டார் சைக்கிள்கள், இயந்திரங்கள் போன்றவற்றில் உராய்வு நீக்கியாகப் பயன்படுத்தப்பட்ட கழிவு ஒயிலை இதற்குப் பயன்படுத்தலாம். ஆனால், அவை மண்ணெண்ணை போன்ற வேறு எண்ணெய் வகைகள் எதுவும் கலக்கப்படாத ஒயிலாக இருக்கவேண்டும்.

*தயாரிப்பு முறை*

6கிராம் கோதுமை மாவை 100 மில்லிலீற்றர் தண்ணீரில் கரைக்கவேண்டும். 6 கிராம் சவர்க்காரத்தையும் அதேபோல 100 மில்லிலீற்றர் தண்ணீரில் கரைக்கவேண்டும். 'சேர்வெக்ஸ்' போன்ற சவர்க்காரத் தூள்களைவிட 'சன்லைட்' போன்ற சவர்க்கார வகைகளே இதற்குச் சிறந்தது.

**வி.பி.சர்மா**
(வலி. தெற்குச் செய்தியாளர்)

300 மில்லிலீற்றர் கழிவு ஒயிலுடன் கோதுமை மாக் கரைசல், சவர்க்காரக் கரைசல் என்பவற்றைச் சேர்த்துக் கலக்கவேண்டும். இவ்வாறு கலக்கப்பட்ட கூழ்க்கரைசல் செறிவு மிக்கதாக இருக்கும். அதனால், தெளிகருவி கொண்டு தெளிக்கமுடியாது. மரத்தில் ஏறி தூரிகை கொண்டு தேங்காய்கள், குரும்பட்டிகள் போன்றவற்றின் மூள்கள் மீது அக்கூழ்க் கரைசலைப் பூசவேண்டும்.

தென்னை மரங்களில் உள்ள காய்ந்த குரும்பட்டிகள் யாவற்றையும் அப்புறப்படுத்தி விடவேண்டும். அதன்பின் கழிவுஒயில் கூழ்க்கரைசலைப் பூசிவிட்டால் அயலில் உள்ள தென்னைகளில் உண்ணிகள் இருந்தாலும் கரைசல் பூசப்பட்ட தென்னைகளை அவை ஒருபோதும் நெருங்கமாட்டா. கூழ்க் கரைசலின் மணம், இரசாயனத் தன்மை என்பன உண்ணிகளை அண்டவிடா.

தென்னை ஆராய்ச்சிச் சபையினரால் இப்புதிய முறை யாழ். குடாநாட்டில் பல்வேறு இடங்களில் பரீட்சார்த்தமாகப் பிரயோகிக்கப்பட்டு வெற்றி காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த முறையின் மூலம் 'மைற்ஸ்' உண்ணித்தாக்கத்தைப் பூரணகட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

மரத்தில் ஏறிக் கூழ்க் கரைசலைப் பூசுவதற்கு ஆள்களை ஒழுங்குசெய்தால் 5,6 பேர்களைக் கொண்ட குழுக்களுக்குக் கிராமம் தோறும் வந்து தேவையான பயிற்சிகளை வழங்கவும் உத்தியோகத்தர்கள் தயாராக உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. ✱



வடவலய மக்கள் வங்கி உதவிப் பொது முகாமையாளராகச் சேவையாற்றி ஓய்வு பெற்ற கே.சிவபாதவிருதயருக்கும் வவுனியா பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்ற கே. ஆனந்தராசாவிற்கும் யாழ். பிராந்திய முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்ற து.ரகுவிற்கும் அண்மையில் சங்கானை மக்கள் வங்கி உத்தியோகத்தர்களால் பாராட்டுவிழா நடத்தப்பட்டது. இதன்போது வலி.மேற்குப் பிரதேச சபை செயலாளர் ரீ.இராசதுரை, சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொன்.அச்சுதம்பிள்ளை மற்றும் கே.ஆனந்தராஜா, கே.சிவபாதவிருதயர் தம்பதி, து.ரகு, வலி.மேற்குப் பிரதேச செயலர் கே.ஏ.மோகன்றாஸ் ஆகியோர் வரவேற்று அழைத்துச் செல்லப்படுகின்றனர். (3-29)

# முக்கிய கைதிகளுடன் வந்த வாகனம் மீது சூடு: 3 சிறை அதிகாரிகளும் ஒரு கைதியும் மரணம்!

## அத்தனகல அருகே இடம்பெற்ற அதிரடித் தாக்குதல்

கொழும்பு, செப்.28

கம்பஹா நீதிவான் நீதிமன்றத்திற்கு நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணை ஒன்றுக்காக அழைத்துவரப்பட்ட கைதிகள்மீது நேற்றுமுன்தினம் இனந்தெரியாத நபர்கள் மறைந்திருந்தவாறு மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மூவரும் சிறைக் கைதியொருவரும் அதே இடத்தில் கொல்லப்பட்டனர்; ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

கடுமையான குற்றங்களுடன் தொடர்புடையவர்களெனக் கருதப்பட்டு பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட முக்கியமான சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம்காலை சிறைச்சாலை அதிகாரிகளால் நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்து கம்பஹா நீதிவான் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணை ஒன்றுக்காகப் பலத்த பாதுகாப்புடன் கொண்டுவரப்பட்ட வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கைதிகளை ஏற்றிவந்த சிறைச்சாலை பஸ் கம்பஹாவிற்கும் அத்தனகலவிற்குமிடையிலுள்ள உடுகம்பொல பாலத்திற்கருகில் காலை 9.50 மணியளவில் வந்து கொண்டிருந்தபோது ஏற்கனவே பாலத்திற்கு அருகில் மறைந்திருந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

சிறைக்காவலர்கள் பதில் தாக்குதல் நடத்துவதற்கு முன்னர் சுட்டவர்கள் மணல் போக்குவரத்தில் ஈடுபடும் 'டிப்பர்' வாகனம் ஒன்றில் ஏறி மின்னல் வேகத்தில் தப்பிச் சென்றனர்.

துப்பாக்கிப் பிரயோகம் சரமாரியாக மேற்கொள்ளப்பட்டதில் முக்கியமான சந்தேகநபரான அம்பகொட என்பவர் படுகாயமடைந்தார். அவருக்கு அடுத்தபடியாக முக்கிய புள்ளியான அசிந்த என்பவர் அதே இடத்தில் உயிரிழந்தார். மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களான விமலதுங்க பெரேரா, ஜே.யூ.நிரோஷன், வை.சி.அமரசிங்க ஆகியோரும் அதே இடத்தில் உயிரிழந்தனர்.

சிறைச்சாலையின் தலைமை அதிகாரியான ஜெயிலர் ஜகத் திஸாநாயக்கவும் சம்பவத்தில் படுகாயமடைந்தார். துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டவுடன் சிறைச்சாலை பஸ்ஸின் சாரதி பஸ்ஸை நிறுத்தாமல் நேரே கம்பஹா வைத்தியசாலைக்குச் சென்று காயமடைந்தவர்களை வைத்தியசாலையில் சேர்த்தார். பின்னர் பொலீஸாருக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தையடுத்து சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்காக உடனடி தேடுதல் நடத்தப்பட்டபோதும் எவரும் கைதுசெய்யப்படவில்லை. கம்பஹா பொலீஸார் மேலதிக விசாரணைகளை நடத்திவருகின்றனர். (க)

# சிறுவர், முதியோர் தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் விவரம்

வலி.தெற்கு,செப்.28

எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச சிறுவர், முதியோர் தின விழாவை முன்னிட்டு வலி.தெற்குப் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினர் உடுவில் கல்விக் கோட்டத்துடன் இணைந்து மேற்படி கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய கவிதை, கட்டுரைப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் பங்கேற்று வெற்றியீட்டிய மாணவர்களின் விவரம் பின்வருமாறு:-

**சர்வதேச சிறுவர் தினம்**

கட்டுரைப் போட்டி:- பிரிவு I ஜெ.பாரதி (மயிலணி சைவ மகாவித்தியாலயம்), ப.ஜெயதர்சினி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), அ.ஹேமா (உடுவில் முருகமூர்த்தி வித்தியா சாலை).

**பிரிவு II**

ம.சங்கீதா (இணுவில் இந்துக் கல்லூரி), ர.வினிதா (ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை), ந.சிவரூபி (ஏழாலை சைவ மகாஜனக் கல்லூரி).

**பிரிவு III**

இ.கிஷாயினி (இணுவில் இந்துக் கல்லூரி), சி.ஹம்சா (இணுவில் இந்துக் கல்லூரி), அ.சித்திரா (இராமநாதன் கல்லூரி).

**கவிதைப்போட்டி**

**பிரிவு I**

வி.சுகன்யா (இணுவில் இந்துக் கல்லூரி), அ.சாம்பவி (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), செ.சங்கீதா (ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி).

**பிரிவு II**

க.ரேவதி (தாவடி இந்து தமிழக் கலவன் பாடசாலை), சி.மாதுமை (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), ஜெ.தர்மிளா (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை).

**பிரிவு III**

கு.அனுஷா (இணுவில் இந்துக் கல்லூரி).

**சர்வதேச முதியோர் தினம்**

**கட்டுரைப்போட்டி**

**பிரிவு I**

ச.மேரிகனுஷா (ஏழாலை சைவ மகாஜனக் கல்லூரி), ம.தக்ஷாயினி (இணுவில் இந்துக் கல்லூரி), ஜெ.தாட்சாயினி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**பிரிவு II**

மு.துவாரகா (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), வீ.இமாஜினி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), கு.நிருபா (தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை).

**பிரிவு III**

க.கணேந்தினி (இணுவில் இந்துக் கல்லூரி), ந.சுகதீபன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), அ.லவாணி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**கவிதைப்போட்டி**

**பிரிவு I**

ச.சக்திதர்சினி (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), இ.மாதங்கி (இணுவில் இந்துக் கல்லூரி), ப.ஜெயந்தினி (உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை).

**பிரிவு II**

ஜெ.கவிதரா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), க.பிரதீபா (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), இ.மதுசூதனன் (இணுவில் இந்துக் கல்லூரி).

**பிரிவு III**

வா.றஜிதா (இணுவில் இந்துக் கல்லூரி), ச.மஜீபன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), தே.றஜீதா (இணுவில் இந்துக் கல்லூரி).

இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 5ஆம் திகதி வலி. தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் நடைபெறவுள்ள சிறுவர், முதியோர் நினைவு நிகழ்வின்போது வழங்கப்படவிருக்கின்றன. (த-152)

# கடும் காற்றினால் விவசாயிகளுக்கு நஷ்டம்

நவாலி,செப்.28

நவாலி ஆனைக்கோட்டைப் பகுதி வயல்களில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்வதற்குப் பசளையாகப் பரப்பப்பட்ட குப்பைகள் தற்போது வீசும் கடும்காற்றினால் அள்ளிச்செல்லப்படுகின்றன.

நெல் விதைப்பதற்காக விவசாயிகள் இலை, தழைக்குப்பைகளைப் பணம்கொடுத்து வாங்கி வயல்களில் பரப்பிவிட்டு மழைக்காகக் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் குப்பைகள் காற்றில் அள்ளுண்டு போவதால் நஷ்டம் ஏற்பட்டு வருவதாக அவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (ஒ-100)



பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட இரத்ததான தினத்தில் சத்தியசாயி சேவா நிலையங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் யாழ். சத்தியசாயி சேவா நிலையத்தில் இரத்தம் வழங்கிய காட்சிகள்.

# வரணியில் வரட்சி

வரணி,செப்.28

தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக வரணிப் பகுதியில் உள்ள நீர்நிலைகளில் தண்ணீர் வற்றியுள்ளது. இதனால் கால்நடைகள் குடிதண்ணீருக்காக அலைகின்றன.

இவ்வாறு குளங்களில் நீர்மட்டம் குறைந்துள்ளதால் குளத்துநீரைப் பயன்படுத்திச் செய்யப்படும் உபஉணவுப்பயிர்ச்செய்கையும் விவசாயிகளால் கைவிடப்பட்டுள்ளது.

வரட்சி காரணமாகக் கிராமங்களில் மேற்கொள்ளப்படும் பனங்கிழங்கு உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-170-203)




வலி.தெற்கு, தென்மேற்கில்

# காலபோகச் செய்கைக்கு விவசாயிகள் முன்னேற்பாடு!

வலி.தெற்கு,செப்.28

வலிகாமம் தெற்கு, தென்மேற்குப் பிரதேச விவசாயிகள் பலர் இவ்வருட காலபோக நெற்செய்கைக்காகத் தமது வயல் நிலங்களைத் துரிதமாகத் தயார்படுத்தி வருகின்றனர்.

இன்னும் சில வாரங்களில் மழைபெய்யக் கூடும் என எதிர்பார்த்து இவர்கள் தமது வயல்நிலங்களை உழுதுபண்படுத்தி வருகிறார்கள்.

உடுவில், கந்தரோடை, சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, நவாலி போன்ற பகுதிகளில் வயல் நிலங்கள் தயார்படுத்தப்பட்டு வருகின்றன.

மழையை எதிர்பார்த்து அடுத்த வார முற்பகுதியில் குளிநெல் நடுவதற்கும் சில விவசாயிகள் திட்டமிட்டிருக்கின்றனர்.

எனினும், உரிய காலத்தில் பருவமழை பெய்யாததால் பிற்காலத்தில் ஏற்படும் பெரும் மழையால் பயிர்களுக்கு அழிவு ஏற்படலாம் எனவும் பல விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (த-152)

## காலாவதியான பொருளை விற்றவருக்கு 5000 ரூபா அபராதம்

வலி.தெற்கு,28

காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட சுன்னாகம் நகரப்பகுதியில் இயங்கும் பல்பொருள் வாணிப உரிமையாளர் ஒருவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

சுன்னாகம், உடுவில், இணுவில் கிராமங்களைச் சேர்ந்த பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனைகளின்போது இந்த நிறுவனத்தில் காலாவதியான உணவுப் பொருள்கள் அதிக அளவில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வர்த்தக நிறுவன உரிமையாளர் மீது பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்கினை விசாரித்த நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் வர்த்தக நிலைய உரிமையாளரைக் குற்றவாளியாகக் கண்டு ஐயாயிரம் ரூபா தண்டம் விதித்தார். (த-152)

# கோழிகளுக்கு தூக்கநோய்

நவாலி,செப்.28

நவாலி ஆனைக்கோட்டைப் பகுதியில் கோழிகளுக்குத் தூக்கநோய் பீடித்துவருகிறது.

அதிக வெப்பம் காரணமாக இந்தநோய் தாக்குவதாகவும் - வீடுகளில் வளர்க்கப்படும் கோழிகள் இதனால் திடீரென இறந்து வருவதாகவும் - தெரிவிக்கப்படுகிறது. (3-100)

# கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்புக் கோருகிறார் அதிகாரி

அச்சுவேலி,செப்.28

புத்தூர் கமநல சேவைப் பிரிவில் கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்குக் கால்நடை வளர்ப்போர் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனப் பெரும்பாக உத்தியோகத்தர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:-

கட்டாக்காலி கால்நடைகளின் பெருக்கத்தினால் விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. இதனால், விவசாய சம்மேளனப் பிரிவு வாரியாகக் கட்டாக்காலி கால்நடை பிடிப்போர் நியமிக்கப்பட்டுள்ளனர். பிடிக்கப்படும் கால்நடைகள் நான்கு தினங்களின் பின்பு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. கட்டாக்காலியாக நடமாடும் கால்நடைகளை மீட்டெடுப்பதற்கு அடிப்படைச் செலவுகளையும் பயிர்ச் சேதத்தையும் உரிமையாளர் செலுத்தவேண்டும் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-11)



கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் ஊனமுற்றவர்களுக்கு சக்கர நாற்காலிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் மந்திகை ஆதார வைத்தியசாலை யில் நடைபெற்றது.

நிகழ்வில் ஊனமுற்ற ஒருவருக்கு சக்கரநாற்காலியை மாவட்டத் தலைவர் லயன் செல்வரத்தினம் வழங்குவதையும் அருகில் லயன் டாக்டர் தியாகராஜா, டாக்டர் கதிரவேற்பிள்ளை, யாழ். மத்திய கல்லூரி அதிபர் க.இராஜதுரை, லயன் கே.தணிகாசலம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- புத்தூர்ச் செய்தியாளர்)

# புனித லிகோரியார் மன்றத்துக்கு குருதிக் கொடையாளர் விருது

தென்மராட்சி, செப்.28

சாவகச்சேரி புனித லிகோரியார் இளைஞர் மன்றம் சிறந்த குருதிக் கொடையாளர் அமைப்புக்கான விருதினைப் பெற்றுள்ளது.

கடந்த வருடமும் இவ்வருடமும் அதிக அளவு குருதி வழங்கியமைக்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற குருதிக் கொடையாளர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வில் இதற்கான விருதினைப் புனித லிகோரியார் தேவாலயப் பங்குத் தந்தை அருட்திரு. ரவிச்சந்திரன் அடிகள் மன்றத்தின் சார்பில் பெற்றுக்கொண்டார். (ஒ-117)

# போக்குவரத்துக்கு ஒத்துவராத வேலணை - புங்குடுதீவு வீதிப்பாலம்

நல்லூர், செப்.28

வேலணை - புங்குடுதீவு இடையேயான இணைப்புப் பாலத்தின் சில பகுதிகள் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. இந்தப் பாலத்தினூடாகப் பயணிக்கும் வாகனங்கள் பெருஞ்சிரமங்களின் மத்தியிலேயே இதனைக் கடக்கவேண்டியுள்ளது.

இதனால், வாகனங்கள் சேதமுறுவதுடன் விபத்துகள் இடம்பெறவும் சத்தியமாகலாம் எனச் சாரதிகள் தெரிவித்தனர் நயினாதீவு, நெடுந்தீவுப் பகுதிகளுக்குச் செல்லும் மக்கள் இந்தப் பாலத்தினூடாகவே பயணம் செய்கின்றனர். தென்பகுதிகளில் மட்டுமன்றிக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கணிசமான மக்கள் தினசரி நயினாதீவுக்கு யாத்திரை செல்கின்றனர்.

இலங்கையில் உள்ள நீண்ட வீதிப்பாலம் இதுவாகும். இந்தப் பாலம் புனரமைப்பின்றி இருப்பது குறித்து இப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (ஒ-111)

# தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் விரைவில் பதிவகப் பணிமனை

தென்மராட்சி, செப்.28

மாவட்டப் பதிவகப் பணிகளைப் பிரதேச செயலகங்களுக்கு விஸ்தரிக்கும் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பதிவகக் கிளை அலுவலகம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்குப் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தில் பதிவகக் கிளை திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடமாகாண உதவிப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவம் ஐயர் தென்மராட்சிப் பிரதேச செயலரைக் கேட்டுள்ளார். (ஒ-117)

# களவாகமணல் ஏற்றிவந்த லொறி இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டது!

சாவகச்சேரி,செப்.28

சட்ட விரோதமாக அகழப்பட்ட மணலை லொறியில் ஏற்றிச் சென்றவர்களை மட்டுவில் வடக்குப் பகுதியில் இனந்தெரியாத இளைஞர்கள் வழிமறித்துத் தாக்கினர்.

கடந்த வியாழன் நள்ளிரவு- மந்துவில் பகுதியில் இருந்து புத்தூர் நோக்கி மணல் ஏற்றிச்சென்ற லொறி மட்டுவில் வடக்கு மருதடிப்பிள்ளையார் கோவிலடியில் இளைஞர்கள் சிலரால் வழிமறிக்கப்பட்டது. இளைஞர்கள் லொறி மீது கற்களை வீசித் தடுத்தனர். அதன்பின் லொறியின் சக்கரங்களைச் சேதப்படுத்திய இளைஞர்கள் அதிலிருந்தவர்களை விரட்டியடித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. அண்மையில் சாவகச்சேரி வடக்கு சோலை அம்மன் கோயில் பகுதியிலும் மணலுடன் வந்த வாகனம் ஒன்று எரிக்கப்பட்டமை தெரிந்ததே. (ஒ-31)

# கசிப்பு விற்றோர் பிடிபட்டனர்

சாவகச்சேரி,செப்.28

மட்டுவில் வடக்கு, மட்டுவில் தெற்குப் பகுதிகளில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர்கள் மதுவரித் திணைக்கள அதிகாரியிடம் சிக்கினர்.

இச்சம்பவத்தில் - மட்டுவில் வடக்குப் பகுதியில் 92 லீற்றர் கசிப்பும், மட்டுவில் தெற்குப் பகுதியில் 35 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டன.

மட்டுவில் தெற்குப் பகுதியில் வெற்றுப் பற்றைக் காணியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 35 லீற்றர் கசிப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர் - எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-31)

# லயன்ஸ் கழகம் மரக்கன்று விநியோகம்

தென்மராட்சி,செப்.28

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மரம் நடுகை வாரத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மரக்கன்றுகளை வழங்கி வருகின்றனர்.

கைதடி முதியோர் இல்லம், நவீல்ட் பாடசாலை, சாவகச்சேரி நகர சபை ஆகியவற்றுக்கு மரக்கன்றுகளை அவர்கள் வழங்கியுள்ளனர்.

அத்துடன், நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் லயன்ஸ் கழக அங்கத்தவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரமதானப் பணியினை மேற்கொண்டனர். அத்துடன், அப்பகுதியில் மரக்கன்றுகளையும் நட்டனர். கழகத் தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் இத்தகவல்களைத் தெரிவித்தார். (ஒ-117)

"நான் பாடசாலை விழாக்களுக்குப் போறதில்ல. எல்லாப் பிள்ளைகளின்ர அப்பாக்களும் அங்க வருவினம். ஆனா எங்கட அப்பா எங்கள விட்டிட்டுப் போயிற்றார். அப்பா வராட்டி எனக்கு வெக்கம்தானே" — நிலக்ஸன் வயது 13

நினைவிற் கொள்ளுங்கள்

பெற்றோருடன் மீண்டும் இணைந்து கொள்வதற்கோ தமக்கும் பெற்றோருக்கும் இடையிலான உறவை வளம்படுத்தவோ சிறுவர்கள் உரிமையுள்ளவர்கள்.

சிறுவர் உரிமைகள் சமவாயம் - 33

பெற்றோரே?
பிரிந்துள்ள உங்கள் குடும்பங்களை ஒன்று சேர்த்து உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்புற உதவுவீர்களா?

உலக சிறுவர் தினத்திற்கு இன்னும் 3 நாட்களே உள்ளன.

## சுருக்கெழுத்துச் சங்கத்தின் ஆண்டுவிழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்.செப்.28

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வு கள் எதிர்வரும் சனிக்கிழமை முதல் நடை பெறவுள்ளன. சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணி தொட்க்கம் 6 மணிவரை அல்வாய் மாலிசந்திப் பிள்ளையார் ஆலயத்தில் சமய நிகழ்வுகள் நடைபெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியால யத்தில் ஏனைய நிகழ்வுகள் நடைபெறவிருக் கின்றன.

கழகத்தலைவர் சி.குலசிங்கம் தலைமை யில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் புனர் வாழ்வு, புனரமைப்பு மற்றும் மகளிர் விவ கார மாகாண அமைச்சின் செயலாளர் வி.செ.சுவாமிநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வின் சிறப்புநிகழ்வாக வடம ராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 20 ஆவது ஆண்டுமலர் வெளியீடு இடம் பெறவுள்ளது. யாழ்.செயலக கணக்காய்வு அத்தியட்சகர் எஸ்.கனகசிங்கம் மலர் வெளியீட்டுரையை யும், ஓய்வுபெற்ற மாவட்ட நீதிவான் மு.திரு நாவுக்கரசு மலர் ஆய்வுரையையும் நிகழ்த் துவர். (3-203)

## கிராய்குளம் புனரமைப்பு

மானிப்பாய் மேற்கிலுள்ள கிராய்குளம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இக்குளம் நீண்டகாலமாகப் புனரமைக் கப்படாததால் விவசாயிகள் பெரும் சிரமங் களை எதிர்நோக்கி வந்தனர் எனக் கூறப் படுகின்றது. இக்குளப் புனரமைப்பு வேலை களை மானிப்பாய் மேற்கு விவசாய சம் மேளனம் மேற்கொண்டுவருகின்றது. (3-90-203)

## மேன்முறையீடு செய்ய அறிவுறுத்து

வரணி.செப்.28

வரணி இயற்றாலை கிராமசேவையாளர் (ஜே/343) பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிக ளின் பெயர்ப்பட்டியல் உரிய கிராம உத்தி யோகத்தர் காரியால யத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி முத்திரை பெறத் தகுதி உடைய வர்கள் எனக் கருதும் குடும்பத் தலைவர் கள், தமது பெயர் இப் பட்டியலில் இடம் பெறாதவிடத்து மேன் முறையீடுகளை தென்மராட்சி பிரதேச செயலருக்கு அனுப்ப லாம் என்றும் -

அம்முறையீடுகள் யாவும் நிவாரண மீளாய்வுக் குழுவி னால் ஆராயப்பட்டு முடிவுசெய்யப்படும் எனவும் - எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் உரியமுறையீடு களை அனுப்பிவைக்கு மாறும் சமுர்த்தி உத்தி யோகத்தர் க.பரமா னந்தம் கேட்டுள்ளார். (3-170)

## கோப்பாய் லயன்ஸ் பதவியேற்பு நிகழ்வு

புத்தூர். செப்.28

கோப்பாய் லயன்ஸ் கழக 2005 - 2006 ஆம் ஆண்டுக்கான புதிய உறுப்பினர்கள் பதவியேற்பு நிகழ்வு அண்மையில் நடை பெற்றது.

தலைவராக லயன் டாக்டர் ப.தியாகராஜா வும், செயலாளராக லயன் எஸ்.சந்திரா தேவியும் பொருளாள ராக லயன் சபா இரத் தினசிங்கமும் பொறுப் பேற்றுள்ளனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு லயன்ஸ் கழகத்தின் சார்பில் சேவை செய்வ தற்காக வடமாகாண - மாவட்டத் தலைவராக கே.செல்வரத்தினம் தெரிவுசெய்யப்பட்டார். (3-ரி-204)


Mother board சிறப்புச் சலுகை




Intel processor
I865GVM7
for New P4/Celeron D
FSB 800/533
3 x DDR400/333/266
6 Channel Audio
8X AGP
8 x USB, & SATA
3 x PCI, 10/100 LAN
intel

AMD processor
KVT 600X-L
for AMD-K7 CPU
FSB 533/400
2 x DDR 400
2 channel Audio
8x AGP slot
8 x USB, & SATA
3 x PCI, 10/100 LAN
AMD

Intel processor
I845GLM-AGP
for P4/Prescott
FSB 533/400
2 x DDR SDRAM266
6 Channel Audio
8X AGP
6 x USB, & SATA
3 x PCI, 10/100 LAN
intel

Mercury
Empowering your PC
ஆசியா-பசிபிக்கில் 70வீதாசர சந்தையைக் கொண்டுள்ளது
இந்தியாவின் 1ஆவது மதர் போர்ட்
இலங்கைமுழுவதும் பரந்த 256 முகவர் சந்தை நிலையங்களில் பராமரிப்பும் விற்பனையும்

MiPAQ PC Series
Intel: Prescott/HT, P4, Celeron
AMD: Duron, Athlon, Sempron




ரூ 48,600/= தொடக்கம்

2.4 Intel Celeron, 15" Monitor
Intel 845 Mother board, 64MB VGA
128 DDR, 80GB HDD, 52X CD ROM
1.44 MB FDD, PS2 MM Keyboard
Optical mouse, Casing, Sound+Speaker

Free faxmodem & 25 hours internet & E-mail.

MICRO PC SYSTEMS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 175/3 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் தொலை: 021 2225893, 077 3126712 |
| நெல்லியடி | பிரதான வீதி, (நெல்லியடி, பொலிஸ் நிலையம் அருகில்) தொலை: 077 3039536 |
| வவுனியா | 73C, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா, தொலை 024 4588339, 0777308417 |
| கொழும்பு - 06 | 15, 36வது ஒழுங்கை, வெள்ளவத்தை தொலை: 011-4516764 |
| கொழும்பு - 13 | 310 ,ஜோர்ஜ் ஆர். டி. சில்வா மாவத்தை கொட்டாஞ்சேனை தொலை 4619673 |
| திருகோணமலை | 148, பிரதான வீதி, திருகோணமலை. தொலை: 026 222 1054, 078 8720639 |



324, Palaly Road, Jaffna.

BIT



விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்

1st & 3rd Semester

New Batches Commence on

Weekend: 01st October at 09.00 a.m.

Weekday: 03rd October at 05.00 p.m.

MCS 324, பலாலி வீதி, (ஆலடிச் சந்தியருகே), யாழ்ப்பாணம்.

Supported by UNDP/JRRP


## முதலாம் வருட நினைவில்...

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 23 | 09 |
| - | - |
| 08 | 10 |
| - | - |
| 1929 | 2004 |



## அமரர் முருகர் இராசரத்தினம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

திதி: அபரபட்ச ஏகாதசி 28-09-2005

மாணவ மணிகளின் நல்லாசானாய்
கடமையில் கண்ணியமாய்
நேர்மைமிகு நிர்வாகியாய்
பாசமிகு கணவனாய்
நேசமிக்க தந்தையாய்
வாஞ்சை மிகு பேரனாய்...நீ

எமை நீங்கி நீங்கள் சென்று பன்னிரு திங்கள் ஆனாலும் தங்கள் நினைவுகள் எமை என்றும் நல்வழிப்படுத்தும் என்ற திடமான நம்பிக்கையில்...

வரணி வடக்கு,
வரணி. (40421)(51-19)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ACTION CONTRE LA FAIM — FIELD OFFICER

**for WATER AND SANITATION PROGRAMS (JAFFNA)**

Action Contre La Faim is an International NGO involved in humanitarian activities in Sri Lanka, since 1997. Current activities are based in Ampara, Batticaloa, Jaffna and Trincomalee districts. To meet the needs in the Water and Sanitation department requirements for the new program, **we require services of dedicated young men and women as field officer (FO) in Jaffna.**

This position is suitable for chemists, biologists or any Science graduates, who have **strong will and commitment to work in humanitarian organization.**

The FO will be in charge of collecting data, sampling, testing of water quality,- hygiene promotion, partially involved in construction management. The FO should have dynamism to understand the water and sanitation situation in the islands and be a part of a team.

Applicants must be a good team player, fluent in English and able to do conversation in Tamil. Computer literacy especially MS Word and Excel is required. Knowledge of GIS software and CAD is an added advantage

**Duration:** I year with insurance coverage

Apply before 5th October 2005. Only short listed candidates will be called for written test and interview:

**ACF Water and Sanitation Job Vacancy**
**No. 40, Racca Lane,**
**Chundikuli, Jaffna.**
**Ph. 2222465, 2226993**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

மலர்வு
25.03.1927

உதிர்வு
14.09.2005



## அமரர் முத்துக்குமாரு கனகரெத்தினம்

கடந்த 14.09.2005 அன்று சிவபதமடைந்த அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு பலவகையிலும் உதவி, ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் இறுதிக்கிரியை களிலும் கலந்துகொண்டோருக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் மலர்வளையம் சாத்தியோருக்கும் உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தந்தி, தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் வழங்கியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிசெய்து எமது துயரில் பங்குகொண்டோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை (29.09.2005) வியாழக்கிழமை காலை வெள்ளைக் கடற்கரையில் (சாட்டி) நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'அன்னை இல்லம்'
காளி கோயிலடி, கரம்பன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

**- குடும்பத்தினர்.**

(40367)(51-19)

## வேலை பயிலுநர் தேவை

கொக்குவில் - பிறவுண் வீதியில் அமைந்துள்ள



### ரயர் நிரப்பும் தொழிற்சாலைக்கு பயிலுநர்கள் தேவை



எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.

**நோர்தேண் இண்டஸ்றீஸ் (பி) லிமிட்**

**69, பிறவுண் வீதி - கொக்குவில்.**

# எழுதுவதற்கு பயிற்சி வழங்கி மாணவரை ஊக்குவித்தல் அவசியம்

வலி.தெற்கு,செப்.27

''எழுத வேண்டும் என்ற ஆர்வம் பெருகி வரும் இக்காலத்தில் எழுதுவதில் பயிற்சி பெறவைத்து மாணவர்களை ஊக்குவிப்பது அவசியமாகும். ஆயுதங்கள் கொண்டு சாதிக்க முடியாதவற்றையெல்லாம் எழுத்தினால் சாதிக்க வைக்க முடியும் என்பதை அவர்கள் உணரவைக்க வேண்டும்.''

ஓய்வுபெற்ற அதிபரும் சமாதான நீதிவானுமாகிய சமூகஜோதி கா.கணேசதாசன் மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் நடைபெற்ற சர்வதேச எழுத்தறிவு தின நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக அவர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

வித்தியசாலை அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கா. கணேசதாசன் மேலும் கூறியதாவது:-

கல்விச் செல்வம் கேடு இல்லாத செல்வம், ஒருவரை எந்தச் சந்தர்ப்பத்திலும் தலை நிமிர்ந்து நிற்க வைக்கக் கூடியது. இதனை மாணவர்கள் நன்கு உணர்ந்து எழுதப் படிக்க வேண்டும். 'பேனாவை வெல்லாது பீரங்கி' என்பதை மாணவர்கள் மனதில் உணர்ந்து செயற்பட வேண்டும். பேச்சிலும் எழுத்திலும் வீரராக இருப்பவர்கள் வாழ்வில் எக்காலத்திலும் சோர்வடையமாட்டார்கள். எழுத்து, பேச்சு ஆற்றல்களை வளர்த்துக் கொண்டதால்தான் அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்ற பலர் இன்றும் பெயருடன் விளங்குகின்றனர்.

மொழியறிவு, உறுப்பெழுத்து போன்ற பயிற்சிகளை பாலர் வகுப்பில் இருந்தே பிள்ளைகளுக்கு வழங்கவேண்டும். கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்கான பின்னூட்டல் பயிற்சிகளை திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும்.

அன்பு, அறிவு, தியாக சிந்தனை, நற்பண்புகள் என்பவற்றை மாணவர் மத்தியில் புகுத்தி நல்ல எழுத்தாளர் பரம்பரையை உருவாக்குவது ஆசிரியர்களின் கடமையாகும் எனக் கூறினார்.

அதிபர் ந.சிவகடாட்சம் தனது தலைமையுரையில், 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பார்கள். மாணவர்கள் எழுத்துப் பயிற்சி பெற்று ஆற்றலுடையவர்களாக விளங்க வேண்டும். செல்வந்தன் முன்னே வறியவன் நிற்பது காணக்கூடிய காட்சியே. ஆனால், எழுத்தாற்றல் உள்ளவர் முன் எழுதத் தெரியாதவன் நிற்பது காணச் சகிக்காத நிலையாகும். எழுத்தறிவில்லாதவர்கள் பொல்லாத விலங்குகளாகக் கருதப்படுவர் எனக் கூறினார்.

ஆசிரியர் கா.முத்துக்குமாரசாமி தமது உரையில் -

பெற்றோர்கள் தம் பிள்ளைகளை தினமும் ஒருசில மணி நேரமாவது எழுதுவதற்கு ஊக்கப்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் அவர்கள் அறிவுக் களஞ்சியமாக திகழவும், அவைகளிலே முந்தியிருந்து புகழைப் பெறவும் அது வழிவகுக்கும் என்றார்.

மாணவர் மன்றத் தலைவி செல்வி. மகிழினி நன்றியுரை கூறினார். (ப-152)

# எமது தனித்துவத்தைப் பேணும் வகையில் நாம் நடந்துகொள்ள வேண்டும்

## யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு



கரவெட்டி,செப்.27

தமிழனுக்கென்று தனித்துவம் இருக்கிறது. இதனைக் கெடுக்கும் விதத்தில் நாம் நடந்துகொள்ளக் கூடாது.

இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் தெரிவித்தார்.

கரவெட்டிப் பிரதேச கலாசாரப் பேரவை நடத்திய கலை இலக்கியப் பெருவிழா அண்மையில் கவிஞர் செல்லையா கலையரங்கில் நடைபெற்றது.

கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று தமிழ்மொழி புறக்கணிக்கப்படுகிறது. இதனால், தமிழை மறந்துவிடும் நிலையில் இருக்கிறோம். இது கவலைப்படவேண்டிய விடயம்.

தமிழன் தன் சுய உரிமையுடன் தனித்துவமாக வாழ அவனுடைய தாயகத்தில் இடம் வேண்டும். இன்று பெரும்பாலான இடங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பாழடைந்துபோய்க் கிடக்கிறது. எமது தாயகத்தை மீட்டெடுத்து சுயமுடன் எம் உறவுகள் வாழ வேண்டும். எம் தமிழை அழியவிடாது காப்பாற்றவேண்டும். இது ஒவ்வொரு தமிழ்பேசும் மக்களினதும் கடமை - என்றார். (70-204)

# உரிமைகளைப் பெற்றுத்தர சர்வதேசம் முன்வராவிடில் நாமே ஒரு முடிவெடுப்போம்

## திலீபனின் நினைவு நிகழ்வில் இளம்பிறையன்

நல்லூர்,செப்.27

மஹிந்த ராஜபக்ஷ யாருடனும் உடன்பாடு செய்து கொள்ளட்டும். தமிழர்கள் அது குறித்து கொதிப்படையப் போவதில்லை. சர்வதேசம் எமது உரிமைகளைப் பெற்றுத்தர முன்வரா விட்டால் நாங்களே எமது நிலைமைகளை தீர்மானிக்க நேரும்.

- இவ்வாறு நல்லூரில் இடம்பெற்ற தியாகி திலீபனின் நினைவுநாள் ஆரம்ப நிகழ்வில் பேசிய யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் இளம்பிறையன் கூறினார்.

தியாகி திலீபனின் 18ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நல்லூரில் உள்ள திலீபன் நினைவுத்தூபியில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வுகளுடன் ஆரம்பமாகியது. தேசிய எழுச் சிப் பேரவைப் பொருளாளர் க.சிங்கராசா தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட் டத்தில் தொடர்ந்து பேசிய இளம்பிறையன் கூறியதாவது:-

ஜே.ஆர்.- இந்திய அரசின் உதவியுடன் செய்த ஒப்பந்தங்கள் எமது உரிமையைப் பெறக் கூடியதாக அமையவில்லை. கரும்புலி




மில்லரின் தாக்குதல்கள் போன்ற எமது போராட்டங்கள் இன்றும் சிங்கள சக்திகளை அச்சுறுத்திக் கொண்டே இருக்கின்றன. தலைவரின் தீர்க்க தரிசனம் காரணமாக உயிராயுதம் தோன்றியது.

1987ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பறேசன் லிபறேசன் தமிழ் மக்களைக் கொடுமைப் படுத்தியது. ஸ்ரீலங்கா இராணுவத் தாக்குதல்களைத் தடுக்க கப்டன் மில்லரின் தாக்குதல் இடம்பெற்றது.


எமது உரிமைகளைப் பெற்றுத்தர சர்வதேசத்திற்கு சந்தர்ப்பங்கள் பல வழங்கினோம். இன்று எமது பகுதிகளில் இடம்பெற்றுவரும் மாநாடுகள் எதிர்காலத்தில் எமக்கான தெரிவுகளாகும். சர்வதேசம் இதை உணர்ந்து எமது உரிமைகளைப் பெற்றுத்தர முன்வராவிடின் நாங்களே எமது நிலைமைகளைத் தீர்மானிப்போம் என்றார்.

சிங்கராசா தனது தலைமையுரையில் கூறியதாவது:-

கடந்த 31/2 ஆண்டுகளாக எமது தலைவர் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஒரு மென்போக்கைக் கடைப்பிடிக்கின்றார். திலீபனின் மறைவுக்குப்பின் இந்தியாவின் கெடுபிடிகள் அதிகரித்தபோது இந்தியாவை அடிபணிய வைத்தார். தென்னிலங்கையில் ஜனாதிபதிக்கான போட்டிகள் நடைபெறுகின்றன. எங்களது பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து எந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் சிந்திப்பது கிடையாது. எமது பிரச்சினைகளைச் சர்வதேசமும் புரிந்துகொள்ளக் கூடியதாக தலைவர் காய்களை நகர்த்தியுள்ளார். எமது மண்ணில் திலீபனின் கனவை உறுதியாக்குவோம். அந்த லட்சியம் விரைவில் நிறைவேறும்-என்றார் அவர். (ப-111)

# சாவகச்சேரி வளம்மிக்க மாநகரசபையாக விரைவில் மாற்றம்பெற வேண்டும்

## யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவிப்பு



தென்மராட்சி,செப்.27

சாவகச்சேரி பிரதேசம் தற்போது நகரசபையாக உள்ளது. இப்பிரதேசம் வளம்மிக்க மாநகரசபையாக மாற்றம் பெறும் நாள் விரைவில் வரவேண்டும்.

- இவ்வாறு உள்ளூராட்சிவார விழாவையொட்டி சாவகச்சேரி நகரசபையினால் அண்மையில் நடத்தப்பட்ட உள்ளூராட்சிவார விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் தெரிவித்தார்.

நகரசபைச் செயலாளர் திருமதி குணமணி தேவி ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற விழாவில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்மராட்சிப் பிரதேசம் 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடம்பெயர்வின் பின்னர் பாரிய அழிவுகளைக் கொண்டதாக இருந்ததை நாம் பார்க்கமுடிந்தது. அழிவுற்ற நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளை மீண்டும் இயங்கவைக்க நகரசபை உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட அயராத முயற்சி எம்மால் மறக்கமுடியாது.

குறைந்த காலத்தில் சபை எல்லைக்குட்பட்ட பகுதி மக்கள் மீளக்குடியமர நகரசபை பெரிதும் உதவியது. நகரசபை எல்லைக்குட்பட்ட மக்கள் அனைவரும் இதற்காக கடமைப்பட்டவர்களாக உள்ளோம்.

யுத்த அனர்த்தங்களால் சபை கட்டடங்கள், வளங்கள் அனைத்தையும் இழந்த போதிலும் நகரசபை உத்தியோகத்தர்கள் தமது சேவையை இழக்கவில்லை என்ற நோக்கில் செயற்பட்டதால் இப்பிரதேசத்தின் பெருமளவு பகுதி புனரமைக்கப்பட்டு பழைய நிலைக்கு திரும்பியுள்ளது.

சாவகச்சேரி நகரை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி 2 ஆயிரத்து 180 மில்லியன் ரூபாவினை வழங்கவுள்ளார். சாவகச்சேரி நகரத்தை நவீன மயப்படுத்தும் திட்டம் எமது கைகளுக்கு அருகில் கிடைத்துள்ளது.

தற்போது நகரசபையாக உள்ள சாவகச்சேரி பிரதேசம் விரைவில் வளம்மிக்க மாநகர சபையாக மாறவுள்ளது. ஜனாதிபதியின் ஆலோசகர் ஹரீம் பீரிஸ் சாவகச்சேரி நகரினைப் பார்வையிட்ட பின்னர் புதிய மாநகரசைபத் திட்டத்தினை முன்வைத்தார். இத்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்- என்றார்.

# பிறமத ஊடுருவலால் சைவம் வீழ்ச்சியுறவில்லை



பிறமதங்களின் ஊடுருவலால் சைவசமயம் வீழ்ச்சியடையவில்லை. இன்றுவரை சைவத்தின் நிலை எழுச்சி பெற்றிருக்கிறது.

இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகரசபை முன்னாள் ஆணையாளரும் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவின் முன்னாள் தலைவருமான கலாநிதி க.குணராசா கூறினார்.

யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவின் நல்லூர் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட நல்லைக்குமரன் - மலர் 13 வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய கலாநிதி குணராசா மேலும் பேசும் போது கூறியதாவது:-

'எம்மதமும் சம்மதம்' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஏனைய மதங்களுக்கும் மதிப் பளித்துக்கொண்டு ஈழத்திலும் சிங்கப்பூர், மலேசியா உட்பட பல நாடுகளில் சைவம் வளர்ந் துள்ளது. இதனை அழிக்க முடியாது. என்றும் நிலைத்து நிற்கும். புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் எமது மக்கள் தமது அடையாளத்தை, மதத்தைப் பேணுவதால் சைவம் எழுச்சியுற்று வருகின்றது. இம்முறை மலர் சற்று வித்தி யாசமாக அமைகிறது. இந்தமுன்ற தொனிப்பொருள் மாநகராட்சி மன்ற ஆலயங்களாகும். அதற்கமைய யாழ்ப்பாண மாநகராட்சிக்கு உட்பட்ட இந்து ஆலயங்கள் குறித்த கட்டுரைகள் மலரில் இடம்பெறுகின்றன.

இங்கே இசை வழங்கியவர்கள் மாநகராட்சி மன்ற ஊழியர்கள் என்றால் உங்களுக்கு வியப்பாக இருக்கும். மாநகராட்சி மன்ற இசைக்குழுவினர் உங்களைப் பரவசப்படுத்தியுள்ளனர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் பேசும்போது:-

எமது இளந் தலைமுறையினர் சைவ சமயத்தின் தத்துவங்களையும் பண்பாடு மிக்க பழக்கவழக்கங்களையும் கைக்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் உன்னதம் மிக்கவர்களாக வாழ யாழ்.மாநகராட்சி மன்றத்தின் 'நல்லைக் குமரன் மலர்' உந்து சக்தியாக விளங்குகின்றது. கடந்த காலங்களில் சைவத்தின் வளர்ச்சிக்கு அது ஆற்றிய பணி நம் நினைவில் நிற்கின்றது.

மலரில் உள்ள ஆக்கங்கள் இளந்தலைமுறைக்கு பயனுள்ளதாக அமைகிறது. காலத்தின் தேவையை உணர்ந்து நல்ல செய்திகள் தரப்பட்டுள்ளன. சைவசமய விவகாரக் குழுவின் இந்தப்பணி தொடர நல்லை முருகன் துணை புரிவாராக என்றார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேசும் போது:-

சமயத்தின் கோட்பாடுகள், சிந்தனைகளை சிறப்பாக எடுத்துக்கூறும் பலதரப்பட்ட அம்சங்களை உள்வாங்கி மலர் எமக்குத் தரப்பட்டுள்ளது. நமக்குத் தெரியாத பல செய்திகள் தரப்பட்டுள்ளன. இம்முறை வெளிவந்திருக்கும் இந்த மலர் அனைத்து மக்களுக்கும் பயன்தரும் ஒன்று என்றார்.

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம குரு சுவாமி சிற்சொரூபானந்தா, ஆசிரியர் ந.விஜயசுந்தரம், தமிழ்த்துறை விரிவுரையாளர் க.குமரன், சைவசமய விவகாரக் குழுவின் செயலாளர் இ.இரத்தினசிங்கம், க.சோமசுந்தரம் ஆகியோரும் உரையாற்றினர்.

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான அறங்காவல்சபையைச் சேர்ந்த தவமணி நாயகம் மலரின் முதல்பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

மாவை ஆதீன கர்த்தா மஹாராஜ ஸ்ரீ சு.து. சண்முகநாதக் குருக்கள் சமய விவகாரக் குழுவினால் கௌரவிக்கப்பட்டார். (ப-111)

# பெரியோரை மதித்தல், குருபக்தி நம்பண்பாட்டின் விழுமியங்கள்

இன்றைய மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து வருவதற்கு அவர்களின் குருபக்தி, கீழ்ப்படிதல் என்பன குறைந்ததும் காரணமாக இருக்கலாம்.

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் உரையாற்றிய யாழ். அரசஅதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூறாவது ஆண்டு நிறைவுவிழா கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் அண்மையில் நடைபெற்றது. விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அரச அதிபர் கே.கணேஷ் மேலும் பேசும் போது கூறியதாவது:-

பெரியோரை மதித்தல், குருபக்தி என்பன எமது பண்பாட்டு விழுமியங்களாகும். அன்றைய மாணவர்கள் இவற்றை மதித்து நடந்தனர். இன்று அந்த நிலை மாறிவிட்டது. கீழ்ப்படிதல் என்பது பெரும்பாலும் அருகிவருகின்றது. யாழ்.மாவட்டத்தின் இன்றைய கல்வித்தரக் குறைவுக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். இந்த நிலைமாற மாணவர்களிடையே நற்பண்புகள் வளரவேண்டும். ஆசிரியர்கள் அதிபர்களது அர்ப்பணிப்பு மட்டும் கல்வி நிலை மேம்பாடடையப் போதுமானதல்ல. ஒழுக்கம் நிறைந்த திடசங்கற்பமான கற்றல் ஊடாக யாழ்.மாவட்டத்தின் கல்வித்தரத்தை உயர்த்த மாணவர்கள் முன்வர வேண்டும் - என்றார்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பேசும் போது கூறியதாவது:-

மயக்க நிலைக்குட்பட்டிருக்கும் எமது கல்வி மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப வேண்டும். யுத்தகாலத்தில்கூட பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கல்வியில் அக்கறை காட்டிய சமூகம் இது. இன்று ஓரளவு வசதிகள் கிடைத்த போதிலும்கூட நமது கல்வித்தரம் பின்நோக்கிச் செல்கிறது எனின் அதற்கான காரணம் என்ன என்பதைக் கண்டறிய வேண்டும். கல்விச் சமூகம் இது விடயத்தில் உரிய கவனம் எடுக்க வேண்டும். நாடாளுமன்றப் பிரதிநிதி என்ற வகையில் எமது கல்வி வளர்ச்சிக்கு முடிந்தவரை நான் சேவையாற்றுவேன் என்பதைத் தெரிவிக்கின்றேன்-என்றார். (ப-111)



தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு வட்டக்கச்சிப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் எடுக்கப்பட்ட படங்கள் (படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)

# திலீபன் நினைவு தினத்தை ஒட்டி வட்டக்கச்சியில் விளையாட்டுப்போட்டி

வட்டக்கச்சி,செப்.28

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வட்டக்கச்சிப் பிரதேசத்தில் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

வட்டக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் அனுசரணையுடன் தியாக தீபம் திலீபன் நினைவுதின ஏற்பாட்டுக் குழுவினரால் இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டன.

பாடசாலை மாணவர்கள், ஏனையவர்கள் எனத் தனித்தனியாகப் போட்டிகள் இடம்பெற்றன.

இந்த விளையாட்டு நிகழ்வுகள் கடந்த 22ஆம் திகதி ஆரம்பமாகின.

முதலாம் நாளன்று மரதன் ஓட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி கிளிநொச்சி பூங்காவனம் சந்தியில் ஆரம்பமாகி வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் முடிவடைந்தது.

பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி பன்னங்கண்டி மூன்றாம் வாய்க்கால் சந்தியில் ஆரம்பமாகி வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் முடிவடைந்தது.

இப்போட்டிகளை இராமநாதபுரம் அ.த.க.பாடசாலை அதிபர் ச.புண்ணியமூர்த்தி, கல்மடுநகர் அ.த.க.பாடசாலை அதிபர் சு.இரவீந்திரன், கரைச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சிவனேசன், வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடர் ஆகியோர் வீரர்களுக்கு கைலாகு கொடுத்து ஆரம்பித்துவைத்தனர்.

60இற்கும் மேற்பட்ட வீர,வீராங்கனைகள் இப் போட்டிகளில் பங்கு பற்றினர்.

மறுநாள் கபடி, தாச்சி, வலைப்பந்து, கரபந்து, கயிறிழுத்தல் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளின் இறுதிப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை யில் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடர், தமிழீழ காவல்துறையின் வட்டக்கச்சிப் பிரதேசப் பணிமனைப் பொறுப்பாளர் கோவிந்தன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியைத் தமிழீழ நிர்வாக சேவைத் துணைப்பொறுப்பாளர் இளஞ்சேரன் ஏற்றிவைத்தார்.

இதனையடுத்து, தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கு கரைச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் வே.சிவனேசன் ஈகச்சுடரை ஏற்றிவைக்க வட்டக்கச்சிப் பிரதேச வர்த்தகர் சங்கத் தலைவர் சந்திரன் மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து கயிறிழுத்தல், கிடுகு பின்னுதல், பெட்டியிழைத்தல், கிறிஸ்கம்பமேறுதல் போன்ற பல்வேறு போட்டிகள் நடைபெற்றன.

அத்துடன் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிப் போராளிகளுக்கும் ஜொனி விளையாட்டுக் கழகத்தினருக்கும் இடையில் சினேக பூர்வ கரபந்தாட்டப் போட்டியும் நடைபெற்றது.

(3-405-203)

## பூநகரியில் கழகங்களிடையே விளையாட்டுப் பயிற்சிமுகாம்



படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்

வெள்ளாங்குளம்,செப்.27

பூநகரிப் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கான பயிற்சி முகாம் ஒன்று அண்மையில் முழங்காவில் மாவீரர் கலை அரங்க மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவரும் பயிற்றுவிப்பாளருமான எஸ்.சாண்டஸ், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி எஸ். கனகராஜா, பூநகரிப் பிரதேச விளையாட்டு இணைப்பாளர் மூர்த்தி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தேசியக் கொடியை முழங்காவில் பிரதேச கிராமசேவையாளர் எஸ். நாகலிங்கம் ஏற்றிவைத்தார்.

இந்தப் பயிற்சியில் 14 கழகங்கள் இணைந்து பயிற்சிபெற்றன.

இரண்டு நாள்கள் பயிற்சிகள் வழங்கப்பட்டன. (3-415-203)

## விளையாட்டு

## பிந்திய தொழில்நுட்பங்களையும் விளையாட்டுத்துறையில் புகுத்தவேண்டும்

### பொறுப்பாளர் பாப்பாவின் ஆலோசனை



பிந்திய விளையாட்டு நுட்பங்களைக் கற்றுத் தேர்ச்சி பெறுவதன் மூலமே விளையாட்டில் சிறப்பான தொரு இடத்தை அடைய முடியும்

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா.

பச்சிலைப்பள்ளி பிரதேச உதைபந்தாட்ட வீர, வீராங்கனைகளுக்கான இருநாள் பயிற்சி நெறி அண்மையில் பச்சிலைப்பள்ளி பிரதேச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

விளையாட்டு அணிகள் வெற்றியை மட்டுமே இலக்காகக் கொண்டு செயற்படாமல் சமூக நேசிப்பையும் தேசியப் பற்றையும் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இதன்மூலமே ஒரு ஆக்கபூர்வமான எழுச்சிமிகு இளைய தலைமுறையின் உருவாக்கத்தை எமது தேசத்தில் எதிர்பார்க்கமுடியும் - என்றார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் சிவசிறி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தேசியக் கொடியைத் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஏற்றிவைத்தார்.

இளையோர் செயற்பாட்டு நிறுவன செயலாளர் அன்ரன் அன்பழகன், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் சிவமணி ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

உதைபந்தாட்ட வீரர்களுக்கான பயிற்சிகளை கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்றுநர் சாண்டஸ் வழங்கினார். (3-203)

## ஆரவாரம் இன்றிநடந்த சிரார்த்ததினம்

ஆரவாரங்கள், அரசியல் பேச்சுகள் எதுவும் இன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர் அமரர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் சிரார்த்ததினம் நேற்றுமுன்தினம் அத்தனகலையிலுள்ள அவரது சமாதிக்கருகில் அனுஷ்டிக்கப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பண்டாரநாயக்கவின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினார். அமைச்சர்களில் ஒரு சிலரே இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பண்டாரநாயக்கவின் பிள்ளைகளான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, வெளிவிவகார அமைச்சர் அநுர பண்டாரநாயக்க ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

திருமதி குமாரதுங்கவின் சகோதரியான சுனேத்ரா பண்டாரநாயக்க மற்றும் பண்டாரநாயக்கவின் நெருங்கிய உறவினர்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (க)

## இளைஞர்கள் மீது தாக்குதல்

பாண்டிருப்பு மாரியம்மன் கோயில் பகுதியில் விசேட அதிரடிப்படை மோட்டார் அணியினர் நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்த இரண்டு இளைஞர்கள் கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். வாகனத் திருத்துமிடம் ஒன்றில் தொழில் புரியும் இவ்விரு இளைஞர்களும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது விசேட அதிரடிப்படையினர் அவர்களை வழிமறித்தனர்.

அதை அவதானிக்காமல் சென்ற இவர்களை விசேட அதிரடிப்படையினர் மோட்டார் சைக்கிளில் விரட்டிச்சென்று கடுமையாகத் தாக்கியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. படுகாயமடைந்த ராஜரட்ணம் நிதர்சன் (வயது - 22), பாக்கியராஜாநவோதயன் (வயது - 23) ஆகியோர் தற்போது கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (க)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் சமூகமேம்பாட்டு உத்தியோகத்தராக (C.D.O.) பணிபுரியும் செல்வி.சி.சுகந்தினி அவர்களின் பாசமிகு தாயார்,

**திருமதி சிவசுப்பிரமணியம் புனிதவதி**

அவர்களின் அகாலமரணச் செய்திகேட்டு மிகுந்த கவலையடைகின்றோம். அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நகரமுகாமையாளர் அலுவலகம்,
சுற்றுச்சூழல் முகாமைத்துவக் கட்டடம்,
பிரதான வீதி,யாழ்ப்பாணம்.

நகரமுகாமையாளரும் சக அலுவலர்களும்,
யு.என்.ஹபிற்றாட்,
(U.N.HABITAT)

(40486)(26.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 20 - 03 - 1920



மறைவு 29 - 08 - 2005

**திருமதி அன்னரத்தினம் நடராசா**

இன்று (28.09.2005) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
(கொக்குவில்- ஜேர்மனி)

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(40487)(21.16.34)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவசுப்பிரமணியம் புனிதவதி



ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் புனிதவதி அவர்கள் 23.09.2005 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சோதிப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் (கார்க்கார மணியம்) அன்பு மனைவியும் சிவகுமார், சிவரூபன், சிவசீலன், சிவராஜ், ரஜனி, சுபாசினி, சுகந்தினி (U.N.Habitat) ஆகியோரின் பாசமிகு தாயும் சாந்தினி, மாலினி, கோமளாதேவி, பகீரதி, மதிரூபன் (U.N.H.C.R), விபுலேந்திரன், சிவகுமாரன் (Owner, Yarl Mobiles, Thirunelvely) ஆகியோரின் அன்பு மாமியும் தவமணிதேவி, சித்திராதேவி, ஆனந்தராசா, ஸ்ரீதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தசாமி, நாகம்மா, நீலாட்சி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சஜீந், சுஜீத், ரஜீத், துஷ்யந்தன், துவாரகா, நிஷாந்தன், பிரஷீந்தன், நர்ஷிகா, நிவேகா, காயத்திரி, அபிரா, சுவேஸ்திகன், வினோஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2005) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(40493)(29-21-16-34)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



# செப். 30இல் 'பொங்குதமிழ்'

# பொங்குதமிழ் உணர்வால் குலுங்குகிறது குடாநாடு!

நாளைமறுதினம் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற இருக்கும் பொங்கு தமிழில் மக்கள் கலந்துகொள்ளத் தயாராகி வருவதன் அதிர்வால் யாழ். குடாநாடு குலுங்கிக்கொண்டிருக்கின்றது.

இது எமது கடமை என்ற உணர்வுறுதியோடு மக்கள் அணிதிரண்டு வருகின்றனர்.



பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வையொட்டி யாழ்.குடாநாடு எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது.

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் கட்டப்பட்டுள்ள பொங்கு தமிழ் எழுச்சி வளைவையே படத்தில் காண்கின்றீர்கள்.

(படம்: பிரபா)

பொங்குதமிழ் வண்டி வீதிகள் தோறும் செல்லும் போது சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை மகிழ்ச்சி ஆரவாரத்தில் திளைக்கின்றனர். சிலர் வண்டியோடு சில தூரம் வந்து வண்டியை வழியனுப்பி வைக்கின்றனர். வயது முதிர்ந்தவர்கள் கூட வண்டியில் ஏறி சிறிது தூரம் வந்து தமது உற்சாகத்தைக் காட்டுகின்றனர். வண்டியை வழியனுப்பி வைக்கின்றனர். 'ஊரில் உள்ள மக்களையும் கூட்டிக் கொண்டு கட்டாயம் வருவோம்' என்ற உறுதி மொழிகள் தருகின்றனர். 24.09.2005 அண்ணா சனசமூகநிலையத்தை அடைந்த போது இரவு 10 மணி இருக்கும்..... பத்து நிமிடத்தில் 300 இற்கு மேற்பட்ட மக்கள் கூடி ஆற்றுகை நிகழ்விலும் பங்குபற்றித் தமது உறுதிகளைத் தெரிவித்தனர்.

வாகனப் பற்றாக்குறையை உணர்ந்து கொண்ட மக்கள் சைக்கிள்களில் ஊர்வலமாக வருவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

சக்கோட்டையில் ஒரு தாய் 'மற்ற ஆள்கள் கேட்பதற்காக அல்ல நாங்கள் வாறது. எங்கள் மனசு சொல்லுது நாங்கள் இதில் கலந்துகொள்ள வேண்டும்' என்று கூறினார்.

இன்னொரு பெண் பொங்குதமிழுக்கு வராமல் இருக்க அந்தரம். ஒன்றும் செய்யாமல் இருக்க ஏலாது. நெடுக அடைபட்டுக் கிடக்காமல்.... இப்படி வந்தால் தான் உணர்வு தெரியும். நாங்கள் செய்யிற தொழில் உத்தியோகம் இல்லை. கடற்தொழில் எங்கட பிள்ளைகளும் சுதந்திரமாகக் கடலுக்குப் போக வேண்டும். கடலுக்குப் போறதிற்கு பாஸ் கட்டாயமாயிருக்கு. தொழிலை அழிச்சு அடைச்சிட்டான். கடலை குழப்பிக் குழப்பி பிள்ளைகளும் மனம் வெறுத்திட்டு. எண்டாலும் பொங்கு தமிழ் பார்த்தால் தான் மனதுக்கு விடிவு வரும். இண்டையில் இருந்து கடவுளைக் கும்பிடுகிறேன் இண்டைய மாதிரி பொங்குதமிழுக்கும் நான் போகவேணும் எண்டு' கூறினார்.

இன்னொருவர் - 'எங்கட கடலில அவனுக்கென்ன அலுவல்? தலைவர் ஒரு வசனம் ஓம் என்று சொன்னால் போதும் எல்லாம் பிடுங்கி எறிஞ்சு கலைப்பம். எல்லாரும் திரண்டால் இவையள் பொயிண்டுக்க இருப்பினமோ? எங்கட உரிமையோட எங்கட இடத்தை விடு எண்டு தான் சொல்லுறம். திரும்ப சண்டை வந்தால் மீட்சி இல்லை. பொங்கு தமிழோட ஆண்டவனே எண்டு விடிவு வந்திட வேணும்' என்றார்.

மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் திரள்வார்கள் என நாம் போகும் இடங்களில் எல்லாம் இனிப்பான செய்தி எம் காதுகளுக்குக் கிடைக்கின்றன. பேருவகை கொள்ள முடிகின்றது. ஒடுக்கப்பட்டு கட்டுகளால் தளையுண்டு கிடந்த மக்கள் தம் கட்டுகளை அறுத்தபடி பலம் பெற்று ஒரு பெரும் சக்தியாய் எழுந்து திரள்கின்றனர். தேசம் தெரிகின்ற பூரிப்பு எங்கும் பொங்கி வழிகின்றது.

எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகத் திரள்வோமோ அவ்வளவுக்கவ்வளவு விரைவாக விடுதலை. இத் திரள்வு ஒவ்வொரு வீடுகளில் இருந்தும் ஆரம்பிக்க வேண்டும். இப் பொங்கு தமிழ் எழுச்சிக்காக மனங்களில் எழுச்சி கொள்வோம். எங்கள் ஊர்களை அலங்கரிப்போம். பதாகைகள் கொடிகளால் சோடிப்போம். இதை ஒரு புனிதமான நாளாகக் கருதுவோம். நாங்கள் பயணிக்கும் துவிச்சக்கர வண்டிகளில் இருந்து பேருந்து வரை கொடிகளைப் பறக்க விடுவோம்.

தமிழ் மக்கள் தங்கள் அபிலாஷைகளைத் தெரிவிக்கும் நாள் பொங்குதமிழ். அபிலாஷை என்பது ஒவ்வொருவரின் தனிப்பட்ட ஆசைகளை விட வித்தியாசமானது. தமிழ்த்தேசியம் தொடர்பான மக்களின் ஒருமித்த ஆசை. இராணுவ அடக்குமுறை காரணமாக இதனை வெளிப்படுத்த தனிமனிதராய், பயந்து போயிருந்த மக்கள் ஒன்று திரண்டு பரந்த வெளியில் நின்று ஒருமித்த பலத்தால் பயம் தெளிந்து உலகுக்குச் சொல்லும் நாள்.

இதற்கு முதல் நாம் பயத்தினால் மௌனமாக இருக்க எங்களைப் பற்றி எங்கள் விருப்பம் பற்றி உண்மைக்குப் புறம்பான கதைகளே சிங்கள பேரினவாதிகளால் வெளி உலகுக்குக் கூறப்பட்டது.

1. நாங்கள் பெரும் திரளாய் கலந்து கொண்டு எழுச்சியாக நடத்திய பொங்கு தமிழ்கள் தான் தமிழ் மக்களின் உண்மையான விருப்பத்தை, சுயநிர்ணய உரிமையோடு வாழ விரும்பும் அபிலாஷையை உலகறியச் செய்தன.

2. விடுதலைப் புலிகளின் வீரம்செறிந்த வெற்றிகள் காரணமாகவும், பொங்குதமிழ் எழுச்சி காரணமாகவும் தான் அரசு - புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொண்டது. பொங்குதமிழுக்கு அந்தச் சக்தி இருந்தது. இதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் திரண்டால் வெற்றி நிச்சயம்.

இம்முறை பொங்குதமிழின் முக்கியத்துவம் என்னவெனில்-

1. நாங்கள் ஒரு தனித்தேசிய இனம்

2. எங்கள் மரபுவழித்தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழ விரும்புகின்றோம்.

3. விடுதலைப் புலிகள் தான் எங்கள் ஏகப் பிரதிநிதிகள்.

இந்த அபிலாஷைகளை உலகுக்குத் தெரிவிப்பதோடு, இம் முறை எமது சுயத்தை நிர்ணயிக்கும் எமது போராட்டத்தை அங்கீகரிக்கும்படி சர்வதேசத்தை கேட்கின்றோம். எமது தாயக நிலத்தையும், கடலையும் ஆக்கிரமித்து நிற்கும் ஸ்ரீலங்கா இராணுவம் எமது மண்ணை, எமது கடலை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்று கேட்கின்றோம்.

மூன்றரை வருடங்களிற்கு மேல் ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி அலுத்து இறுதியில் ஆழிப்பேரலை மனிதாபிமானக் கட்டமைப்பிற்குக் கூட நீதி மன்றத்தால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்ட நிலையில் ஸ்ரீலங்கா அரசினால் முற்றிலும் நம்பிக்கை இழந்த நிலையில் சர்வதேசத்திடம் இக்கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

நாம் ஒரு யுத்த விளிம்பில் நிற்கின்றோம். ஸ்ரீலங்கா பேரினவாதிகளால் நிழல்யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. எந்த நிலையிலும் யுத்தம் வெடிக்கும் என்ற நிலையில் பொங்குதமிழ் - 2005 வருகின்றது.

இந்தப் பொங்கு தமிழ் சண்டையின்றி தமிழர்களின் உரிமையோடு கூடிய சமாதானத்தை அடைவதற்கான இறுதிச் சந்தர்ப்பம் என நாம் கருதுகின்றோம். இதற்கு சர்வதேசம் மதிப்பளிக்கத்தவறும் பட்சத்தில் தவிர்க்க முடியாதபடி ஒரு யுத்தத்தை எதிர்கொள்ள வேண்டியவர்களாய் நாம் நிர்ப்பந்திக்கப்படுவோம். எனவே, எவ்வளவுக்கெவ்வளவு நாம் அணி திரண்டு எமது ஏகோபித்த குரலை சர்வதேசத்தின் காதுகளில் ஒலிக்கச் செய்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு எமது விடுதலை விரைவுபடுத்தப்படும்.

'சண்டையின்றி' தமிழர் உரிமையோடு கூடிய சமாதானத்தை இலங்கைத் தீவில் ஏற்படுத்துதற்கான ஒரு சந்தர்ப்பம் தமிழ் மக்களின் கைகளில் வந்துள்ளது. அதை நாம் தவறவிட்டுவிடக் கூடாது என்பதே எமது கோரிக்கை.

*திருமதி பத்மினி சிதம்பரநாதன்,*
*நாடாளுமன்ற உறுப்பினர்.*

# வலி.மேற்கில் பொங்குதமிழ் பிரசாரம்

சங்கானை,செப்.28

சுழிபுரம், சங்கானை, சித்தன்கேணிப் பகுதிகளில் பொங்குதமிழ் ஊர்தியுடன் பிரசாரம் செய்துவரும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.

பொங்குதமிழ் எழுச்சி நாளையொட்டி அரங்கச் செயற்பாட்டுக்குழுவினரின் தீவிர பிரசாரம் ஒரு புறமும் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் - மாதர் சங்கம், சனசமூக நிலைய அங்கத்தவர்களைச் சந்தித்து கலந்துரையாடியும் வருகின்றார்.

மேலும், முச்சக்கரவண்டிகள் மூலம் ஒலிபெருக்கிப் பிரசாரமும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

(எ-29)

# எங்கள் மண் எங்களுக்கு என்பதை பொங்கு தமிழால் உரத்துச் சொல்வோம்!



'சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே அதைத் தாரணிக்கெல்லாமெடுத்து ஓதுவோமே' என்று பாரதி கூறியது போல் உலகத்துக்கு உரத்த குரலிலே "தமிழர்களாகிய நாம் செம்மொழியுடைய உயரினம்; நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் மண்ணிலே தான் பல்லாண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அது எங்களுடைய சொந்த மண் என்று கூறுவதுதான் பொங்குதமிழ். இந்த மண்ணுக்காக உயிர் நீத்த மாவீரர்கள் மனம் மகிழ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் எடுத்த ஓர் அரிய முயற்சி பொங்குதமிழ்.

நாம் பல இன்னல்களையும் துயர்களையும் அடைந்தபோது, எங்கள் குரல் உலக அரங்குக்கு எட்டாதிருந்த வேளையிலே எங்கள் மொழியிலேயே உலகுக்கெல்லாம் பேரறிக்கை செய்தது பொங்குதமிழ். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட இந்தப் புதுமையான முயற்சிக்குத் தமிழ்க் கரங்கள் உயர்ந்தன; உலகமே இதைக் கண்டு திரும்பியது; பார்த்து வியந்தது. ஆனால், பலன் கிட்டுவதற்குப் பல தடைகள் ஏற்பட்டன. பல சூழ்ச்சிகள் நடந்தன. இந்த நிலையிலேதான் 30.09.2005 வெள்ளிக்கிழமை பொங்குதமிழ் மீண்டும் நடைபெறவுள்ளது. எமக்குச் சொந்தமான இடத்திலே நாம் உரிமையுடன் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதை உலகுக்குப் பறைசாற்றுவதாக இப்பொங்கு தமிழ் அமையவுள்ளது. தமிழர் ஒவ்வொருவரும் இப்பொங்குதமிழில் பங்குபற்ற வேண்டும். இது எங்கள் கடமைமாத்திரமல்ல உரிமையும் கூட.

உலக நாடுகள் எங்களை அவதானித்துக் கொண்டிருக்கின்றன. வன்முறை எதுவுமின்றி ஒற்றுமை என்னும் மதிப்பான உணர்வுடன் "எங்கள் மண் எங்களுக்குச் சொந்தமானது" என்றுதமிழ் மொழியிலே தமிழ் மக்கள் பொங்கு தமிழாலே ஒன்று கூடி உரத்துக் கூறும் பொழுது உலகநாடுகள் உண்மையை உணர்ந்து கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

இதனை உறுதிப்படுத்துவதற்கு முதியோர், இளைஞர் எல்லாத்துறைசார்ந்த பெரியோர், வணிகப் பெருமக்கள், மாணவசமூகம் முதலாய பொதுமக்கள் எல்லோரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு அருகிலுள்ள விளையாட்டு மைதானத்தில் ஒன்று திரண்டு உலகத்துக்கு உறுதியாக "எங்கள் நிலமே எமக்கு வேண்டும்" என்று கூறுவதற்கு வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

*- பேராசிரியர் அ.சண்முகதாஸ்.*

# கண்டம் விட்டுக் கண்டம் வாழ்ந்தாலும் கனடாத் தமிழர்கள் கைகொடுப்பர்!

பொங்குதமிழ் - 2005 சீரோடும் சிறப்போடும் எழிலோடும் பொலிவோடும் நடக்க எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொங்குதமிழ் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயப்படுத்துவதில் மகத்தான வெற்றி கண்ட இயக்கம்.

பொங்குதமிழ் மீசைத் தமிழ்மன்னர்ஆண்ட தங்கத் தமிழீழத்தை மீண்டும் ஆள நினைப்பதில் என்னகுறை என சூளுரைத்த பேரெழுச்சி!

பொங்குதமிழ் 'நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காக இராணுவத்தினரே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்!' என்ற முழக்கத்தை தமிழீழத்தை ஆக்கிரமித்து நிற்கும் சிங்களப் படைக்கு அறிவித்தல் கொடுத்த பேரியக்கம்!

பொங்குதமிழ் சொல்லும் செய்தி அனைத்துலக நாடுகளின் மனக்கதவைத் தட்டட்டும்! பொங்குதமிழ் விடுக்கும் செய்தி கனேடிய அரசின் செவிப்பறையை எட்டட்டும்!

இப்பொங்குதமிழ் பொன்னாளில் கண்டம் விட்டுக் கண்டம் வந்தாலும் தாயக விடுதலைப் பயிருக்கு நாளும் பொழுதும் நீர்வார்ப்போம் எனச் சூளுரைக்கின்றோம்.

இப்பொங்குதமிழ் நன்னாளில் மண்மீட்புப் போருக்கு தோள் கொடுக்கும் உங்களுக்கு நாங்கள் கைகொடுப்போம் என உறுதி கூறுகின்றோம்!

*றொறன்ரோ*
*கனடா.*

*- தமிழ்ப்படைப்பாளிகள் கழகம்.*

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொக்குவில், சம்பியன் லேனுக்கு அருகில் K.K.S. Road, 3rd Mile Post இல் 1½ பரப்புக் காணியில் 3 அறை கொண்ட வீடும் 1½ பரப்பு வெற்றுக் காணியும் விற்பனைக்குண்டு. மேலதிக விவரங்களுக்கு 011-2586514, 0714-264119. (சி-45271)

### காணி விற்பனைக்கு

கொக்குவில் சாய்துர்க்கா கோயிலுக்கு அருகில் 1¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0776656046. (சி-45319)

யாழ்ப்பாணம், மணிகூண்டு வீதி, பெருமாள் கோயிலடியில் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777 271225. (40488)

உரும்பிராய், ஒஸ்கா லேனில் (வேம்பன் ஒழுங்கை). பலாலி றோட்டில் இருந்து 800 மீற்றர் தூரத்தில் (இலங்கை மின்சார சபைக்கு அருகில்) 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0776442018. (40494)

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள மிட்சுபிசி Super Saloon 14 - XXXX தொடர் இலக்கமுடைய கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0712501605, 0714813933 (40500)

### பிரபல எழுத்தாளரின் நூல்கள்

1.'இமயம்' மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான பதினொரு நவீன நாடகங்கள், 2. யாழ்ப்பாணமா? கொழும்பா? 3. எங்கள் நாடு 4. வானொலி நாடகம் எழுதுவது எப்படி? 5. ஒரு காதலின் கதை 6. சிறுகதை எழுதுவது எப்படி? அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. (40469)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39657)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 03.10.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக்கிளைகளிலும், சிவகலை - கோப்பாய், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, உடுவில் பாம் சென்ரர்- உடுவில், நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (40293)

### தவறிவிட்டது

பலாலி மத்தி, வசாவிளான் என்ற முகவரியுடைய சுப்பிரமணியம் செந்தூரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (863240263V) யும் விசேட அடையாள அட்டையும் (090702318) என்பன கடந்த 21.09.2005 புதன்கிழமை புன்னாலைக்கட்டுவனுக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டன.கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். பாபு பேக்கரி புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தி. (40495)

---

Dialog GSM kit எந்நேரமும் உன்னுடன்...

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் -
Sim (connection) இணைப்புகளையும், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்.
சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு, வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகள

**WESTERN UNION | பணப் பரிமாற்றம்**

ஊடாக உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக் கொள்ளவும். இன்னும் பல சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளும் எமது வாடிக்கையாளர்களுக்கு அளப்பரிய பரிசில்கள்!
நாடுங்கள்:

**SRI MURUGAN**
Tele Communication & Agenc Post Office,
303, K.K.S. Road, Jaffna. T.P.: 021 222 5392, Fax: 222 3214 E-Mail:Srimurugan@erueka.lk
(சி-45333)(24-32-34-15)

---

## மரண அறிவித்தல்

### சபாபதி சந்திரபாலன்

(ஓய்வுபெற்ற H.N.B. வங்கி ஊழியர்)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி சந்திரபாலன் அவர்கள் நேற்று (27.09.2005) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - லீலாவதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - அருளம்மா தம்பதியினரின் மருமகனும் பிறேமாவின் (ஆசிரியர், கொழும்பு) அன்புக் கணவரும் பிரவீனா, செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரமோகனின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தெகிவளை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2005) புதன்கிழமை முற்பகல்10 மணிக்கு இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

34, வைத்தியா வீதி,
தெகிவளை.
T.P:. 0114205426

தகவல்:
மனைவி - பிறேமா
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு.

(40499)(32-15-34)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 24 - 05 - 1926



மறைவு 28 - 08 - 2005

### அமரர் வேலுப்பிள்ளை சரஸ்வதி

எங்கள் குல ஒளி விளக்கே
எங்கு சென்றீர் எம்மை விட்டு
மீண்டும் எம்மிடம் வந்திடுவீர்
மீள ஒளி பரப்பிடுவீர்।

மில் வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
அருளீஸ்வரன்,
பிரியதர்சினி,

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(40496)(32-15-34)

---

### தேவை

தட்டச்சு இயந்திரம், றோணியோ இயந்திரம் திருத்துவதில் அனுபவமுள்ளவர்கள் மற்றும் பழக ஆர்வமுள்ளவர்கள் தேவை.

தொடர்பு:- **மருதம்ஸ்**
66,மணிக்கூண்டு வீதி,
(ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.
(40498)(26-32-34-15)

---

**டிஜிற்றல் போட்டோ கொப்பி**
$A_4$- கறுப்பு வெள்ளை -3 ரூபா
$A_4$- கலர் 40 ரூபா

**மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்**
62/16, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

---

### விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்- போன் சொப்**
10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி
(திரீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம.
(சி/44956)(2-16-15)

---

**யாழ் - கொழும்பு பெரிய பஸ் கட்டணம்**
**குறைக்கப்பட்டுள்ளது Rs.1100/=**
**திறீ ஸ்ரார் ஹோட்டல்**
இல.162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 222 3817 7125

---

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் - மூளாய்

### பதவி வெற்றிடங்கள்

1) மெல்லக் கற்போர் செயற்றிட்டத்திற்கான ஆசிரியர் ஆளணியினர்
வேண்டப்படும் தகைமை:
1. க.பொ.த. உயர்தரம் சித்தி
2. சமூக செயற்பாடுகளில் அனுபவம்
3. தொண்டு செயற்பாடு மனப்பாங்கு
4. வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்டிருத்தல்

2) கார்ச்சாரதி
வேண்டப்படும் தகைமை:
1. க.பொ.த. சாதாரண தரம்
2. சாரதி அனுமதிப் பத்திரம்
3. ஓட்டுநர் அனுபவம்

3) தொழில்திறன் பயிற்சி வள ஆளணி
வேண்டப்படும் தகைமை:
1. பல்கலைக்கழக பட்டதாரி/க.பொ.த. உயர்தர சித்தி
2. சமூக செயற்பாடுகளில் அனுபவம்
3. தொழில்திறன் சம்பந்தமான பயிற்சி பெற்றிருத்தல்
4. கணனியில் அனுபவம்

4) கணக்காளர்
வேண்டப்படும் தகைமை:
1. கணக்குப் பதிவாளராகக் கடமையாற்றிய அனுபவம்
2. கணனியில் Excel இல் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருத்தல்.

- சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களை 30.09.2005 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.
- 02.10.2005 முற்பகல் 10.30 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும்.
- உரிய ஆவணங்களுடன் நேரில் சமுகம் தரவும்
- விண்ணப்பிக்கும் முகவரி:

**முகாமையாளர்,**
சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம்-மூளாய்,
சுழிபுரம்.
(சி/45318)(32-34-15)

---



## மரண அறிவித்தல்

திருமதி
### சுந்தரமூர்த்தி யோய் நற்குணவதி (யோய்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வதிவிடமாகக் கொண்டவரும் தற்பொழுது இணுவில்வீதி, மானிப் பாயில் வசித்தவருமாகிய திருமதி சுந்தரமூர்த்தி யோய் நற் குணவதி 26.09.2005 திங்கள்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

யோய் பார்மசி மானிப்பாய்.
தொ.பே.இலக்கம். 222 2754, 4591960. (சி-45321)(15-16)

தகவல்:
சுகந்தன் (மகன்).

# ஈராக் சிறைக்கைதிகளைத் துன்புறுத்திய அமெரிக்கப் பெண் சிப்பாய் குற்றவாளி!

## இராணுவ நீதிமன்றம் தீர்ப்பு



லண்டன்,செப்.28

ஈராக்கின் அபுகிராய் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளைத் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்த அமெரிக்கப் பெண்சிப்பாய் ஒருவரைக் குற்றவாளியென அமெரிக்க இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஈராக் தலைநகர் பக்தாத் அருகே இந்த அபுகிராய் சிறைச்சாலை உள்ளது.

கடந்த ஆண்டு இந்தச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளைப் பெண் சிப்பாய் ஒருவர் மோசமாக நடத்தியமை தொடர்பான படங்கள் ஊடகங்களில் வெளியாகிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக லின்டி இங்கிலன்ட் (வயது 22) என்ற அமெரிக்கப் பெண் சிப்பாய் 4 குற்றச்சாட்டுக்களில் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார்.

கைதிகளை மோசமாக நடத்தியமை, சதி செய்தமை, இழிவான செயலைப் புரிந்தமை உட்பட நான்கு குற்றங்களைப் புரிந்துள்ளதாக விசாரணை மன்றம் அறிவித்துள்ளது.

இவருக்கு 10 வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர் தனது நண்பிகளாலும், ஆண் நண்பராலும் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளார் என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ள நீதிமன்றம் மறுத்துவிட்டது.

இவரது ஆண் நண்பர் சாள்ஸ் கிரானர் என்பவர் ஏற்கனவே குற்றவாளியாகக் காணப்பட்டு 10 வருட சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார்.

கைதிகளைத் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பாக விசாரிக்கப்பட்டு வந்த 9 இராணுவத்தினரில் இங்கிலன்ட்தான் கடைசி இராணுவ அதிகாரி.

டெக்ஸாஸிலுள்ள விசாரணை மன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டபோது இங்கிலன்ட் எதுவித உணர்ச்சியையும் வெளிப்படுத்தாமல் நிமிர்ந்து நேராக நின்றிருந்தார்.

இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் வாதிட்ட இராணுவ சட்டத்தரணி, இங்லன்ட் கைதிகளை அவமானத்துக்குள்ளாக்கியுள்ளார். அதனை அவர் ரசித்துள்ளார். பல வீனமானதோர் நகைச்சுவை உணர்ச்சி அவருக்கிருந்துள்ளது. தனது சொந்த மகிழ்ச்சிக்காகவும் ஏனையவர்களுக்காகவும் இவ்வாறு நடந்துகொண்டுள்ளார் என்று கூறினார்.

ஏற்கனவே, ஓர் இராணுவ விசாரணையின் போது இங்கிலன்ட் குற்றத்தை ஒப்புக்கொண்டதை நீதிபதி ஏற்க மறுத்தார். தாம் செய்வது தவறான செயல் என்பதை தாம் அறிந்திருக்கவில்லை என்று அவர் கூறியதையும் நீதிபதி ஏற்கவில்லை.

(ப-8)

## உலக அரங்கில்

### 60 வயதைக் கடந்தவர்கள் சீனாவில் 13 கோடிபேர்

சீனாவில் 60 வயதைக் கடந்தவர்களின் எண்ணிக்கை 13 கோடியைத் தாண்டியுள்ளது. அந்த நாட்டு மக்கள் தொகையில் 10 இல் ஒருவர் 60 வயதைக் கடந்தவர்.

வயதானவர்களின் வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு 3 சதவீதம் உயர்ந்து வருகிறது.

சீனாவில் பிறப்புவிகிதம் குறைந்து வருகிறது. அதேநேரத்தில் ஆயுள் அதிகரித்து வருகிறது. 2015 ஆம் ஆண்டு 60 வயதைக் கடந்தவர்களின் எண்ணிக்கை 20 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.(8)

# தீவிரவாத அச்சுறுத்தல், பாதுகாப்பின்மை காரணமாக ஈராக்கிலிருந்து இளம் டாக்டர்கள் வெளியேற்றம்

பக்தாத்,செப்.28

தீவிரவாதிகள் அச்சுறுத்தல், போதிய பாதுகாப்பு இன்மை மற்றும் குண்டு வீச்சுகளுக்கு மத்தியில் பணியாற்ற விரும்பாமல் ஏராளமான இளம் டாக்டர்கள் ஈராக்கை விட்டு வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர்.

சதாமின் ஆட்சிக் காலத்தின்போது ஈராக் டாக்டர்களுக்கு மாதச் சம்பளமாக இரண்டு டொலர் வழங்கப்பட்டது. குறைவான சம்பளம் மற்றும் மேற்படிப்பு போன்ற காரணங்களைக் கூறி ஈராக் டாக்டர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் பழக்கம் பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது. இது அமெரிக்கப் படையெடுப்புக்குப் பிறகு அதிகரித்துவிட்டது.

அமெரிக்க படையெடுப்பினால் ஈராக் போர்க்களம்போல மாறிவிட்டது. குடிதண்ணீர் வசதி, மின்சார வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் எதுவும் அங்கு சரிவரக் கிடையாது. எந்தச் சமயத்தில் எந்த தீவிரவாதி காயங்களுடன் வருவாரோ என்ற பயத்திலேயே டாக்டர்கள் காலம் தள்ளவேண்டி உள்ளது. இது மட்டுமல்லாமல், தீவிரவாதிகளின் அச்சுறுத்தலும் இருந்து வருகிறது.

ஈராக்கில் படித்து பட்டம் பெற்ற பல டாக்டர்கள் அங்கு பணியாற்றப் பயந்து வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். கடந்த 2003ஆம் ஆண்டு முதல் இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஈராக்கில் உள்ள டாக்டர்கள் சங்கத்தின் கணிப்புப்படி கடந்த ஆண்டு மட்டும் டாக்டர்கள், தாதிகள், பல் நிபுணர்கள் என்று ஆயிரத்து 500 பேர் ஈராக்கை விட்டு வெளியேறியுள்ளனர்.

பெரும்பாலானவர்கள் ஜோர்தான் மற்றும் அரபு நாடுகளுக்கும், ஒரு சிலர் ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றுள்ளனர். ஈராக்கில் இருந்து ஓட்டம் பிடிப்பதில், கடந்த பத்து ஆண்டுகளில் பட்டம் பெற்ற இளம் டாக்டர்களே முன்னிலையில் உள்ளனர். கடந்த 1998இல் ஈராக்கில் இருந்து டென்மார்க் சென்ற டாக்டர் அகில் வாலி, தற்போது ஐந்தாயிரம் டொலர் சம்பளம் பெறுகிறார். அவர் மீண்டும் ஈராக் செல்வது குறித்து கற்பனை கூட செய்து பார்க்க முடியாது என்கிறார்.

பெரும்பாலான டாக்டர்கள் வெளியேறி வரும் நிலையில் மருத்துவத்துறை ஈராக்கின் முக்கியத் தொழிலாக மாறிவிட்டது. ஈராக் மருத்துவமனைகளும் போதிய அடிப்படை வசதிகள் இல்லாமல் நோயாளியாகக் காட்சி தருகின்றன. (8)

# மாவோ தீவிரவாதிகள் 8 பேர் நேபாளத்தில் சுட்டுக்கொலை!

காத்மண்டு,செப்.28

நேபாளத்தில் மாவோ தீவிரவாதிகள் போர்நிறுத்தத்தை அறிவித்தாலும், இராணுவத்தினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்திவருகின்றனர். கடந்த சில நாள்களில் எட்டு மாவோ தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நேபாளத்தில் இருந்த ஜனநாயக ஆட்சியை கடந்த பெப்ரவரியில் மன்னர் ஞானேந்திரா அகற்றினார். இதன் பிறகு அரசியல் கட்சிகளுக்கு கடும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டு வருகிறது. இதை எதிர்த்து அரசியல் கட்சிகள் போராடி வருகின்றன.

நேபாளத்தில் கம்யூனிஸ ஆட்சி அமைக்கும் நோக்கில் மாவோ தீவிரவாதிகள் கடந்த 1996ஆம் ஆண்டு முதல் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை இராணுவம் - தீவிரவாதிகள் இடையே நடந்த மோதல்களில் 12 ஆயிரத்து 500 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேபாள அரசியல் கட்சிகளின் நன்மதிப்பைப் பெற மாவோ தீவிரவாதிகள் இந்த மாத முற்பகுதியில் போர்நிறுத்தத்தை அறிவித்தனர். டிசெம்பர் வரை இது அமுலில் இருக்கும். இராணுவத்தினர் தாக்கினால் பதிலடி கொடுப்போம் என்று மாவோ தீவிரவாதிகளின் தலைவர் பிரசந்தனா தெரிவித்தார். ஆனால், இந்தப் போர்நிறுத்தத்தை இராணுவத்தினர் ஏற்றுக்கொள்ளவில்லை.

தீவிரவாதிகளுக்கு எதிரான தேடுதல்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. நேபாளத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள டெக்ரதம் மாவட்டத்தில் நடந்த சண்டையில் இரண்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அதற்கு முன்னர் பால்பா மாவட்டத்தில் நடந்த சண்டையில் ஆறு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இராணுவத்தின் இந்தப் போக்கை தீவிரவாதிகளின் ஆதரவாளர்கள் கண்டித்துள்ளனர். இதனால் மீண்டும் இரு தரப்பிலும் போர் மூளும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். (8)

# பெருநாட்டில் பூகம்பம்: வீடுகள் தரைமட்டம்; 4 பேர் பலி!

லிமா ,செப்.28

தென் அமெரிக்காவில் உள்ள பெரு நாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பலத்த பூகம்பம் ஏற்பட்டது. ரிச்டர் கருவியில் அதன் அளவு 7ஆகப் பதிவாகியிருந்தது. அந்த பூகம்பத்தால் பல வீடுகள் தரைமட்டமாயின. அதில் சிக்கி 4பேர் உயிரிழந்தனர்.

வடக்குப் பெருவின் காட்டுப் பகுதியில் உள்ள மோயோபாம்பா என்ற நகரத்துக்கு வடகிழக்கில் 90 கிலோ மீற்றர் தொலைவில் அந்தப் பூகம்பம் ஏற்பட்டது. அதில் பல வீடுகள் இடிந்து தரைமட்டமாயின. மின்சாரம் துண்டிக்கப்பட்டது. தொலைபேசி இணைப்புகளும் துண்டிக்கப்பட்டன.

வீடுகளின் இடிபாடுகளில் சிக்கிப் பலர் இறந்துள்ளனர் என்று அந்தப் பகுதிக்கு அருகில் உள்ள லாமாஸ் என்ற ஊரைச் சேர்ந்த கார்லோஸ் மோரி என்பவர் வானொலி நிலையத்துக்குத் தகவல் தெரிவித்தார். ஆனால், 4 பேர் மட்டுமே இறந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(8)

## தனக்கெதிரான நெருக்கடியைச் சமாளித்து

# இஸ்ரேலியப் பிரதமர் பதவியை தக்கவைத்தார் ஏரியல் ஷெரோன்

டெல்அவிவ்,செப்.28

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் தனது தலைமைத்துவத்திற்கு ஏற்படவிருந்த நெருக்கடி நிலையிலிருந்து தப்பிவிட்டதாக அவரது கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

அவரது லிக்குட் கட்சியிலிருந்து இந்த ஆபத்து அவருக்கு நேரவிருந்ததாக கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இஸ்ரேலிய நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்தச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஒன்று தோற்கடிக்கப்பட்டதன் மூலம் அவரது தலைமைப் பதவி காப்பற்றப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவேண்டிய தேர்தலை முன்கூட்டியே இவ்வாண்டு நவம்பர் மாதத்தில் நடத்துவதற்கான தீர்மானத்தை லிக்குட் கட்சியின் 3 ஆயிரம் பேராளர்கள் கொண்ட மத்திய குழுவில் நிறைவேற்றுவதற்கு பிரதமரின் எதிராளியான பெஞ்சமின் நெத்தன்யாகுவின் ஆதரவாளர்கள் முன்மொழிந்தனர்.

காஸாவிலிருந்து இஸ்ரேலியர் வெளியேறியது தொடர்பாக ஏரியல் ஷெரோன் மீதான ஒரு கருத்துக் கணிப்பாக இந்தத் தீர்மானம் கருதப்பட்டிருந்தது. அது பேராளர்களால் தோற்கடிக்கப்பட்டதால் ஷெரோன் தலைமைக்கு ஏற்படவிருந்த ஆபத்திலிருந்து அவர் தப்பிவிட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காஸாவின் ஒரு பகுதியை தீவிரவாதிகளிடம் ஷெரோன் கையளித்துவிட்டார் என்று அவரது கட்சியைச் சேர்ந்த நெத்தன்யாகு குற்றஞ்சாட்டி வருகிறார். தீர்மானத்தின் மீது வாக்களிப்பு நடந்து சிலமணி நேரத்தில் இஸ்ரேலிய விமானங்கள் காஸாப் பகுதியிலிருந்த தீவிரவாதிகளின் நிலைகள் மீது குண்டுவீசி தாக்குதல்களை நடத்தின.

இஸ்ரேலிய பிரதேசத்தின் மீது தீவிரவாதிகள் ஏவுகணைத் தாக்குதல் நடத்துவதற்காகப் பயன்படுத்திவந்த பாலங்களின் மீது தாம் குண்டுத் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேலிய விமானப் படையினர் கூறினார்கள்.

பலஸ்தீனியர்களின் வன்செயல்களுக்கான பரிசாகவே காஸாப் பகுதி விட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது என்று லிக்குட் கட்சியின் பல உறுப்பினர்கள் கருகிறார்கள். அதனால்தான் தலைமைப் பதவியிலிருந்து ஷெரோனை அகற்ற விரும்புகிறார்கள் என்று பி.பி.ஸி. நிருபர் தெரிவித்தார். அதேசமயம், காஸாவிலிருந்து இஸ்ரேலியர் வெளியேறியதன் மூலம் கால ஓட்டத்தில் இஸ்ரேலுக்குப் பலத்த பாதுகாப்பான நிலைமை ஏற்படும் என பெரும்பாலான உறுப்பினர்கள் கருதுகிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தலை முன்கூட்டியே நடத்த வேண்டும் என்ற தீர்மானத்துக்கு ஆதரவாக மத்திய குழுவில் ஆயிரத்து 320 பேரும் எதிராக ஆயிரத்து 433 பேரும் வாக்களித்தனர். 104 மேலதிக வாக்குகளால் இந்தத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.

அடுத்துவரும் காலத்திலும் ஷெரோனுக்கு சவால்கள் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. வாக்களிப்பையடுத்து கட்சியினரைத் தனது தலைமையின் கீழ் ஒன்று திரளுமாறு ஷெரோன் கேட்டுக்கொண்டார்.

(ப-8)







## INTERNATIONAL SCHOOL - MANIPAY

"a school with a difference"

GRAND OPENING JANAURY - 2006

1. MONTESSORI ON WARDS
2. CHILDREN FROM AGES 01 YEAR TO 05. YEARS WILL ALSO BE ADMITTED
3. EXTRA LANGUAGES TAUGHT: GERMAN / FRENCH

PARENTS PLEASE APPLY EARLY TO AVOID DISSAPPOINTMENT

FIRST PREFERENCE TO TSUNAMI AFFECTED CHILDREN

*VACANCIES*- GRADUATES, TRAINED, A/L QUALIFIED TEACHERS AND AMI QUALIFIED (MONTESSORI).

INITIAL TRAINING FOR THREE (03) MONTHS AT MANIPAY FROM 5th OF OCTOBER.

**Sangarapillai Road,**
**Manipay.**
**T.P.4591983** (40506)



## சர்வதேச பாடசாலை - மானிப்பாய்

"முன்மாதிரியான பாடசாலை"

வடக்கில் பிரமாண்டமான ஆரம்ப விழா- தை 2006

1. முன் பள்ளியிலிருந்து 7 ஆம் வகுப்பு வரையானது
2. ஒரு வயது முதல் மூன்று வயதுப் பிள்ளைகளும் சேர்க்கப்படுவார்கள்
3. ஜெர்மன் / பிரெஞ்சு மொழிகளும் கற்பிக்கப்படும்.

வரையறுக்கப்பட்ட அனுமதிகள் மட்டுமே உள்ளதால் பெற்றோர்கள் தாமதிக்காது விண்ணப்பித்து ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளவும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களிற்கு முன்னுரிமை.
மாணவர்களுக்கான சிறப்பு வசதிகள்: 1. தங்குமிடம்(மாணவர் விடுதி)
2. போக்குவரத்து இலவசம்

1. யாழ்ப்பாணம் - குருநகர் - இராசாவின்தோட்டம் - மானிப்பாய்
2. சுழிபுரம் - சித்தன்கேணி - மானிப்பாய்
3. உரும்பிராய் - கோண்டாவில் - கொக்குவில் - மானிப்பாய்.

**சங்கரப்பிள்ளை வீதி,**
**மானிப்பாய்.**
**தொ.பே.: 4591983** (40507)(26-18)


## கண்ணீர் அஞ்சலி



மொபைல் நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவராக செயற்படும் ம.சிவகுமாரன் அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி சிவசுப்பிரமணியம் புனிதவதி

அவர்கள் 23.09.2005 வெள்ளிக்கிழமை அகாலமரணம் அடைந்த செய்திகேட்டு துயர் அடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் , அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மொபைல்
ஊழியர்களும், நண்பர்களும்.

(40505)(26-18)

## தகவல் திரட்டு

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில், 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரை கற்கைநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான தொழில்வாய்ப்பினை ஆராயும் முகமாக தகவல்கள் திரட்டப்படுகின்றன. எனவே, தங்களுடைய சுய விவரக் கோவையுடன் எதிர்வரும் 3 ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரையான நாள்களில் காலை 9 மணி தொடக்கம் 12.30 மணிவரை யாழ் தொழில்நுட்பக் கல்லூரி, தொழில் வழிகாட்டல் ஆலோசனை நிலையத்தில் தங்கள் பதிவினை மேற்கொள்ளுமாறு மாணவர்களை கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (9)

## பொங்கு தமிழ் கலந்துரையாடல்

சங்கானை,செப்.28

வலிகாமம் மேற்குப்பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம சேவையாளர்கள் உட்படத் தேசிய எழுச்சிப் பேரவையின் ஊரகக் கிளை அங்கத்தவர்களுக்கான பொங்குதமிழ் கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பொங்கு தமிழ் நிகழ்வில் பங்குபற்றும், பாடசாலை மாணவர்கள், பொதுமக்களின் போக்குவரத்து, ஏனைய வசதிகள் பற்றி கலந்துரையாட இருப்பதால் அன்றையதினம் அனைவரையும் இதில் பங்குபற்றுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேட்டுள்ளனர். (9-29)

## விரைவில் நியமனம்

தென்மராட்சி,செப்.28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றுவோருக்கு எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றும் 30 பேரின் பெயர்ப்பட்டியல் வலயக் கல்வி அலுவலகத்திற்கு மாகாணக் கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை நடத்தி பெறுபேறுகளை அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (9-117)

# உலக உணவுத்திட்ட நிதியில் வில்லூன்றி மயானம் புனரமைப்பு

நல்லூர்,செப்.28

உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் வில்லூன்றி இந்துமயானம் புனரமைக்கப்பட்டுவருகின்றது.

யாழ். மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பணியில் நாவாந்துறை சன சமூக நிலைய உறுப்பினர்கள் பத்துத் தினங்களாக சிரமதானப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

உணவுக்கான வேலைத்திட்டத்தில் இது இடம்பெறுவதால் வேலைக்குரிய கொடுப்பனவாக உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதாகவும் இப்பகுதியைச் சேர்ந்த ஏனைய சன சமூக நிலையங்களின் உறுப்பினர்களும் இப் புனரமைப்புப் பணியில் கலந்துகொள்ள முன்வரவேண்டும் என்றும் வில்லூன்றி இந்து மயான பரிபாலன சபையின் செயலாளர் இ.திருக்கருணை தெரிவித்துள்ளார். (த-111)

## தவறி வீழ்ந்து காயம்!

தென்மராட்சி, செப்.28

மின் கம்பத்திலிருந்து தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் காயமடைந்தார்.

கட்டந்த வியாழக்கிழமை இரவு சாவகச்சேரி, கச்சாய் வீதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த கே.தயாபரன் (வயது 38) என்பவர் காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை, மாங்காய் பறிக்க மரத்தில் ஏறிய மாணவன் தவறி வீழ்ந்து காயமடைந்தார்.

மீசாலை மேற்கில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த சிவராசசிங்கம் அஜந்தன் (வயது 14) என்ற மாணவன் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

காயமடைந்த இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஒ-117)

## வீதி விபத்துகளில் இருவர் காயம்!

தென்மராட்சி, செப்.28

வாகனத்தை முந்திச் சென்ற மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டினை இழந்து வீதியோரம் குவிக்கப்பட்டிருந்த கற்குவியலுக்கு மேல் ஏறியதால் அதில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மீசாலையில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த கே.சுரேஷ்வரன் (வயது 15) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

இதேவேளை, மற்றொரு வீதிவிபத்தில் மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்டு காயமடைந்த பருத்தித்துறை, தும்பளையைச் சேர்ந்த ஜே.எஸ்.அரவிந்தன் (வயது 30) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-117)

## Jayoda ஜயோதா ජයෝදා

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6291237 முதல் 6304155 வரை சீட்டிழுப்பு இல. 171 திகதி 26-9-2005

வெற்றி எண்கள் **4 1 0 8 6 9** சுப்பர் எண் **01**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,56,79,550/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,56,79,550/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 113 | 5,000/- | 5,65,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,134 | 500/- | 5,67,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எணகள் | 11,353 | 50/- | 5,67,650/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,12,497 | 10/- | 11,24,970/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 117 | 1,000/- | 1,17,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,140 | 100/- | 1,14,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,246 | 20/- | 2,24,920/- |
| | | மொத்தம் | 49,25,540/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 55,28,140/- |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **15,995,175/-**

தொடர் இல. 7230115 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 செப்டம்பர் 29 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 6298584-9-89 |
| கம்பஹா | 6295764-8-75 |
| கொழும்பு | 6303616-4-01 |
| புத்தளம் | 6303845-7-44 |
| மட்டக்களப்பு | 6297832-2-13 |
| மாத்தளை | 6297186-8-53 |
| களுத்துறை | 6297608-6-30 |
| திருகோணமலை | 6299681-9-12 |


BTEC Edexcel International - UK

அனேக மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க யாழ் மண்ணில்!

**Higher National Diploma (HND) In**

Computing | Software Engineering | Computer Network Technology | HND in Business | Business IT | Multimedia Integeration

IDM The Nation's IT Academy

மேற்படிக் கணனிக் கற்கை நெறியானது எமது நிறுவனத்தில் மிகவிரைவில் ஆரம்பமாகவுள்ளதால் இதற்கான பதிவுகளை எதிர்வரும் 02-10-2005 இற்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அனைத்து மாணவர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

மேலதிக விவரங்களுக்கும் பதிவுகளுக்கும்: **No,216,Navalar Road, Jaffna.** Tel:- 021 4591398

# புலிகளின் தூதுக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குவதாகவுமே இருக்கிறது. அதிர்ச்சிக்குள்ளாக்கிய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பாகவும், அண்மைய சில வாரங்களாக நடைபெற்றுவரும் வேறு பல கொலைகள் குறித்தும் ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் தனது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

பயங்கரவாத இயக்கப் பெயர்ப் பட்டியலில் விடுதலைப் புலிகளையும் இடம்பெறச் செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் மிகத் தீவிரமாக பரிசீலனை செய்துவரும் அதேவேளை, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் எதுவும் மறு அறிவித்தல் வரும்வரை புலிகளின் தூதுக் குழுவினர் தங்கள் நாடுகளுக்கு விஜயம் செய்யமிடத்து அவர்களின் வருகையை வரவேற்பது இல்லை என்றும் உடன்பட்டுள்ளன.

அங்கத்துவ நாடுகளில் விடுதலைப் புலிகளாலும் அவர்களின் முன்னணி அமைப்புகளாலும், இயக்கத்துக்கு நிதி திரட்டுதல், இயக்கப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுதல் போன்ற சட்டவிரோத செயற்பாடுகளை தடுத்து கட்டுப்படுத்துவதற்கு உள்ளூர் மட்டத்தில் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அங்கத்துவ நாடுகள் இணங்கியுள்ளன.

சிறுவர்களை இயக்கத்தில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்வது குறித்தும் அறிக்கையில் ஒன்றியம் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

சமாதான முன்னெடுப்பில் தங்களுக்குள்ள பற்றுறுதியையும், விருப்பத்தையும் புலிகள் உடனடியாக பொதுநடவடிக்கைகள்மூலம் செய்து காண்பிக்கவேண்டும் என்று கடந்த செப்டெம்பர் 10ஆம் திகதி இணைத் தலைமை நாடுகள் விடுத்த கோரிக்கை பற்றியும் அறிக்கை நினைவூட்டியிருப்பதோடு அதனை நிறைவேற்றுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் மொத்தம் 27 ஐரோப்பிய நாடுகள் அங்கம்வகிக்கின்றன.

## புலிகளால் கைதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்நுழைந்துவிட்டோம் இடம்தெரியாது' என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில், இவர்கள் ஒரு படைப் பிரிவைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். அத்துடன் எமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிக்குள் நுழைந்தபோது சிவில் உடையில் தோற்றமளித்தனர். முதல் விசாரணையின்போது தம்மை இனம் காட்டிக்கொள்ள மறுத்துவிட்டனர். இவர்களுடைய உள்நுழைவானது சதி நோக்கமாக இருக்கலாம். அது தொடர்பான புலன்விசாரணைகள் இடம்பெற்று வருவதால் இவ் விசாரணைகளை மேற்கொள்வதற்கு 14 நாள்கள் கால அவகாசம் மன்று வழங்கவேண்டும். தமிழீழ குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 58 உபபிரிவு 2இன்கீழ் இன்னும் 15 நாள்வரை ஸ்ரீலங்கா மூன்று காவல்துறையினரும் தமிழீழ காவல்துறையினரால் தடுத்துவைக்க முடியும்.- எனவும் தெரிவித்தார்.

மூன்று பொலீஸார் சார்பில் வாதிட்ட சட்டவாளர் ரி.எஸ்.வேலவர் - மூன்று பொலீஸாரையும் பிணையில் விடுவிக்கலாம். பிணையில் விடுவிக்கப்படும் மூன்று பொலீஸாரும் நீதிமன்றில் கட்டளைகளை ஏற்று மன்றுக்கு சமுகம் அளிப்பார்கள். இவர்களுடைய குடும்ப நிலைமைகள் கருத்தில் எடுக்கப்படவேண்டும். சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட நபர் ஒருவரை கைதுசெய்வதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினரால் இவர்கள் நியமிக்கப்பட்டவர்கள். இன்றுவரை தமிழீழ காவல்துறையினரால் இவர்களது குற்றவரையறைகள் மன்றுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை- எனத் தெரிவித்ததுடன் மூன்று பொலீஸார் தொடர்பான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஆவணங்களையும் நீதியாளரிடம் கையளித்தார்.

சட்டவாளர் ரி.எஸ்.வேலவர் சமர்பித்த ஆவணங்களை தமிழில் மொழிபெயர்த்து சமர்ப்பிக்கும் படியும் தமிழீழ காவல்துறையினர் குற்றவரைவினை வரையறை செய்து மன்றுக்கு சமர்ப்பிக்கும்படியும், வழக்கின் அடுத்தக்கட்ட விசாரணைகள் எதிர்வரும் 11 ஆம் திகதி இடம்பெறும் எனவும் அதுவரை மூவரையும் தடுப்புக் காவலில் வைக்குமாறும் தமிழீழ காவல்துறையினருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதியாளர் சதானா உத்தரவிட்டார்.


## பொங்கு தமிழ் நிகழ்வு 30.09.2005

எதிர்வரும் 30.09.2005 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும். மேற்படி நிகழ்வில் மானிப்பாய் ப.நோ.கூ. சங்கக் கிளைக்குழு, பொதுச்சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் யாவரும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(அ-45331)(30-11-12) மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம், மானிப்பாய்.

## G.A.Q.,? 1st in Com. 06,07

ஆரம்பம்:- 01.10.2005 சனிக்கிழமை காலை8.30
யாழ்/பேராதனை வெளிவாரி விரிவுரைகள்
A/L 04 இதற்கு முன்னரும் 3 பாடங்களில் சித்தி.
முற்பணங்கள் அறவிடப்படமாட்டாது. உங்கள் வழமையான விரிவுரையாளர் குழு. பதிவுகள் யாவும் எம்மால் செய்துதரப்படும்.
B.A.Part 1 ஆரம்பமாகிவிட்டது.
(அ-45315)(30-11-12)
D.C.C.A. ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



உயர்திரு. சண்முகம் சிவராமன்
(உரிமையாளர், இலங்கையன் பதிப்பகம், யாழ்ப்பாணம்)

அவர்கள் கடந்த திங்கட்கிழமை இறைபதம் அடைந்த செய்தியறிந்து மிகவும் துயரடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உரிமையாளர்களும், ஊழியர்களும்.

சிறிலங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

றஞ்சனாஸ் தொலைத்தொடர்பகம்,
383, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(அ-45330) (54-11-12-30)

## 33ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 25 - 02 - 1939



மறைவு 27 - 08 - 2005

### திருமதி சற்குணம் தங்கம்மா

அன்பின் திருஉருவமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் சிகரமாய்
வாழ்ந்த எம் சகோதரியே!
உயிர் உள்ளவரை உம்மை மறவோம்.

கடந்த 27.08.2005 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது தெய்வத்தின் வீட்டுக் கிரியைகள் இன்று (28.09.2005) புதன்கிழமை காலை 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

காளி கோவிலடி,
மல்லாகம்.
(40517)(30-11-12)

சகோதரர்கள்,
மைத்துனிகள், மருமக்கள்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 27 - 11 - 1945



மறைவு 30 - 08 - 2005

### திருமதி சிவஞானசோதி ஸ்ரீஸ்கந்தா

கடந்த 30.08.2005 செவ்வாய்க்கிழமையன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி திருமதி சிவஞானசோதி ஸ்ரீஸ்கந்தா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (29.09.2005) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அத்தருணம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதேவேளை, அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் மலரஞ்சலி செலுத்தியவர்களுக்கும் பல்வேறு வழிகளில் எமக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பெரியமதவடி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
(40515)(30-11-12)

ஸ்ரீ.ஸ்ரீவெங்கடேசன்,
ஸ்ரீ.திருமகள்,
ஸ்ரீ.ஸ்ரீரங்கநாயகி (பிள்ளைகள்).


## விற்பனைக்கு

ஆண், பெண் துவிச்சக்கர வண்டி, சாளி மோட்டார் சைக்கிள், கோழிக் கூடு, மில் மோட்டர், தையல் இயந்திரம்.
தொடர்பு :-
திருமதி கங்காதேவி இராஜரட்ணம்
418, நாவலர் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.
T. P:- 021 - 222 6821
(40519)

மனோகரா யாழ்ப்பாணம்
சிம்பு, கோபிகா நடித்த
தொட்டி ஜெயா
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30.
(அ-44110)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
ஸ்ரீகாந், சோனியா அகர்வால் நடித்த
ஒருநாள் ஒருகனவு (சினஸ்)
30 முதல் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம் ரவி நடித்த மழை
காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

ராஜா யாழ்ப்பாணம்
28 வரை நியூ புகழ் எஸ்.ஜே.சூர்யா, நிலா நடித்த
அன்பே ஆருயிரே
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
29 முதல் சூர்யா அஸின் நடித்த
கஜினி

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்.
மணிகண்டன், சிம்ரன்,
ஜெய் ஆகாஷ் மற்றும் பலர் நடித்த
கிச்சா வயது 16
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)
வெகு விரைவில் சாணக்கியா


## கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பி
செல்வி சி.சுகந்தினி அவர்களின்
அன்புத் தாயார்

### திருமதி சிவசுப்பிரமணியம் புனிதவதி

அவர்களின் அகாலமரணச் செய்திகேட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

புவியியற்றுறை 1999/2000, 2000 / 2001
கல்வியாண்டு மாணவர்கள், யாழ். பல்கலைக்கழகம்.
(40516)(54-11-12-30)

## கண்ணீர் அஞ்சலி



### பொன்னுத்துரை நாகேந்திரம்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி கோயில் பரிபாலன சபையினராகிய நாங்கள் எமது ஆழ்ந்த அனுதாபத்தினை இவர் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன் அவரது ஆத்மசாந்திக்காக அருள்மிகு சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

சுதுமலை. (40518) (54-11-12-30)

சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி கோயில்
பரிபாலன சபை.

## மரண அறிவித்தல்கள்

### யோசப் அந்தோனிப்பிள்ளை துரைசிங்கம்
(மருந்து)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் அந்தோனிப்பிள்ளை துரைசிங்கம் (மருந்து) 25.09.2005 ஞாயிற்றுக்கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசப் -விக்டோறியா தம்பதியரின் அன்பு மகனும், சாந்தலூசியாவின் (ராணி) அன்புக் கணவரும் மனோகரன், பாப்பா, ஜெராட், விக்ரநீனா, கருணாகரன், பிரபா ஆகியோரின் அன்புத் தந்தையும் நேசமணி காலஞ்சென்ற தங்கரெட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தம்பிராசா காலஞ்சென்ற செல்லையா ஆகியோரின் மைத்துனரும் வசந்தி, யூக்சின், மொறிஸ், சுயோ, யசோதரா ஆகியோரின் அன்பு மாமனாரும் மயூரி, மஜீனா, அன்ரனிற்றா, அனுசியா, அதீஸ்கரன், கிறிஸ்ரிகா, ஜெரோமி, சுரேக்கா, சுரேஸ் ஆகியோரின் பேரனும் டோமினிக் காலஞ்சென்ற புஸ்பராசா காலஞ்சென்ற பிறேராசா, ஜீவராசா, அஞ்சலா, டெய்சி, லலிதா, மல்லிகா, சகிலா, நிர்மலா, ராசா, பாலன், ரதீஸ், டயா, கீதா, காலஞ்சென்ற கவிதா ஆகியோரின் பாசமிகு தாய்மாமனும் மரியசீலன், யேசுதாஸ், கிளி, இராயப்பு, கிறிஸ்துராசா, அந்தோனியாப்பிள்ளை, ரதி ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2005) புதன்கிழமை ஊர்காவற்றுறை தேவமாதா ஆலயத்தில் 2 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக சென். அன்ரனிஸ் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேம் றோட்,
ஊர்காவற்றுறை.
(40513)(30-11-12)

தகவல்:
கண்ணா (மகன்), ஜீவராசா (மருமகன்),
ருவிங்கிள்ஸ்ரார் பாண்டியன்தாழ்வு.

### திருமதி லீலாவதி ஆனந்தி (சாந்தி)



ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் பொம்மைவெளி, ஓட்டுமடத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி ஆனந்தி (சாந்தி) அவர்கள் நேற்று (27.09.2005) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சுரேஸ், சுதா, தர்சினி, ஜிவிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் அனுலா, ரதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுரேக்கா, தினேஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2005) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

அராலி வீதி,
பொம்மைவெளி. (40520)(30-11-12)

தகவல்:
குடும்பத்தினர்.

# ஒஸ்லோ, டோக்கியோ உடன்பாடுகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர், அத்தீர்வை மக்கள் அபிப்பிராயத்துக்காக - சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் - மக்கள் முன்சமர்ப்பிக்கவேண்டும். அதனை மக்கள் ஏற்றுக்கொண்ட பின்னர் அதனை உள்ளடக்கக் கூடிய புதிய அரசமைப்புத் திட்டம் ஒன்றைத் தயாரிப்போம். புதிய அரசமைப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, தற்போதுள்ள அரசமைப்புச் சட்டப்படி அதனை மீண்டும் சர்வஜன வாக்கெடுப்புக்கு சமர்ப்பித்து மக்கள் அங்கீகாரம் பெறுவோம். மூன்று மட்டங்களில் அதிகாரத்தைப் பரவலாக்கும் இந்திய முறை பற்றியும் நாம் ஆராய்ந்து வருகிறோம்.

இவை யாவற்றின் ஊடாகவும் எமக்கென்று சொல்லக் கூடிய புதிய முறை ஒன்றைத் தேடிச் செல்கிறோம்.

-இப்படி அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் உள்ளடக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:-

நாங்கள் ஒருபோதும் பிரிவினைக்கு இடமளிக்கமாட்டோம். நாங்கள் ஐக்கிய இலங்கைக்காக அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம். முதன்முறையாக தனிநாட்டுக்குப் பதிலாக ஐக்கிய இலங்கைக்குள் சகல இனத்தவர்களும் ஏற்றுக்கொள்ளும் தீர்வொன்றை ஆராய்வதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளை இணங்க வைப்பதற்கு எம்மால் முடிந்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட சரத்துகளுக்கு ஏற்பவே அந்த இணக்கங்களை ஏற்படுத்தினோம்.

### ஐக்கிய இலங்கைக்குள் நிரந்தர சமாதானம்

சமாதான முன்னெடுப்பை ஆரம்பித்து ஐக்கிய இலங்கையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வொன்றின் மூலம் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதே எங்களுடைய அடுத்த நடவடிக்கையாக இருக்கவேண்டும். அதுவே பிரிவினைக்கான முற்றுப்புள்ளியாகும்.

இனப்பிரச்சினை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையே உள்ள இணக்கப்பாடு, அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளிடையே ஏற்பட்ட இணக்கப்பாடு மற்றும் ஒஸ்லோ, டோக்கியோ பிரகடனங்கள் ஆகியவற்றின் ஊடாக எங்களுடைய நாட்டின் ஆட்புல எல்லையைப் பாதுகாத்து ஜனநாயக ஐக்கிய இலங்கைக்குள் சகல இனத்தவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றுக்கு வரக்கூடிய ஒரு சூழல் உருவாகியுள்ளது. இது ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வொன்றை அடைவதற்கு உள்ள ஒரே சூழலாகும். இதற்குச் சர்வதேசத்தின் முழுமையான ஆதரவும் கிடைத்துள்ளது. எனவே, இப்போது நாங்கள் செய்யவேண்டியது, இந்த நடவடிக்கையினை அந்த இடத்திலிருந்து முன்னெடுத்துச் செல்வதாகும்.

1.சுனாமி நிவாரணச்சபை தொடர்பான வழக்கில் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் செல்லுபடித்தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருப்பதனால் சமாதான முன்னெடுப்பினை மீண்டும் ஆரம்பித்தல்.

### பொலீஸ் சேவையை பலப்படுத்துதல்

2.யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பலப்படுத்தல். கண்காணிப்புக் கட்டமைப்பிற்குப் பொலீஸ் அதிகாரமில்லை. யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அமைக்கப்படும் பொழுது இருந்ததைவிட மிக மாற்றமான நிலை தற்போது உருவாகியுள்ளது. ஆகையால், உருவாகியுள்ள புதிய நிலைமை தொடர்பாகப் பயன்தகு முறையில் செயற்படவேண்டுமாயின் கண்காணிப்புக் குழு செயற்படுவதற்கான புதிய வழிமுறைகளை நாங்கள் தேடிக்கொள்ளவேண்டும். யுத்தநிறுத்த உடன்படிக்கையின் கீழ் சட்டத்தை அமுல்நடத்தும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உரியது. இன்று அந்தச் சட்டத்தைச் செயற்படுத்துவதில் பலவீனங்கள் பல உள்ளன. எனவே, இவற்றைத் திருத்தியமைத்து பலம் வாய்ந்த பொலீஸ் சேவை மூலம் சட்டத்தையும் ஒழுங்கையும் செயற்படுத்தும் கட்டமைப்பினை மறுசீரமைத்தல்.

3.அந்த வழியில் சகல தரப்பினராலும் செய்யப்படும் படுகொலைகளை நிறுத்துதல்.

4.வடக்கு - கிழக்கில் வாழும் மக்களுக்குச் சமாதானத்தின் பெறுபேறுகள் சென்றடைவதற்கான வழிவகைகளை அமைத்தல், யுத்தம் மற்றும் சுனாமி என்ற இரு அனர்த்தங்களுக்கும் முகம்கொடுத்த மக்களுக்கு மனிதாபிமான ரீதியான அபிவிருத்தி உதவிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமாயின் புதிய வழிகளைத் தேடிச் செல்லல். குறிப்பாக வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்காகப் பிரத்தியேக அமைச்சு ஒன்றை உருவாக்கல்.

5.வன்செயல்களைக் கைவிடுதல், மனித உரிமைகள் தொடர்பான சித்தாந்தங்களுக்கு மதிப்பளித்தல், ஜனநாயகம், சட்டத்தின் ஆதிபத்தியம், சிறுபான்மையினரின் உரிமைகளை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் சகல இன மக்களதும் தேவைகளை நிறைவேற்றுதல், ஒஸ்லோ பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட காரணிகளின் அடிப்படையில் நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்.

### டோக்கியோ பிரகடனம்

6.சமாதான முன்னெடுப்பினை முன்னெடுத்துச் செல்வதற்காகப் பின்பற்றப்படவேண்டிய பின்வரும் நிபந்தனைகள் டோக்கியோப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த நிபந்தனைகளின் அடிப்படையாகக் கொண்டு செயற்படுதல்.

✱ இரு தரப்பினரும் பூரணமாகப் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு ஏற்ப நடந்துகொள்ளல்.

✱ வடக்கு - கிழக்கு அபிபேச்சுகளில் பங்கு பற்றச் செய்தல்.

✱ இறுதித் தீர்வொன்றை அடையும்வரை ஒஸ்லோ பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு சமாந்தரமான முன்னேற்றத்தை நடைமுறைப்படுத்தல்.

✱ யுத்த நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்தவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்.

✱ சகல மக்களதும் மனித உரிமைகளைப் பயன்தகு வகையில் முன்னேற்றுதல் மற்றும் பாதுகாத்தல்.

✱ சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், சாதாரண நிலைமை வரை மாற்றுதல் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளில் பெண்கள் மற்றும் ஆண்களுக்குச் சமமான சமசந்தர்ப்பம் கிடைக்கும்வரை அரசியல் மற்றும் ஏனைய தீர்மானங்கள் எடுக்கும் சகல பரிமாணங்களையும் பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தல்.

✱ ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் செயற்றிட்டத்திற்கமைய சிறுவர்களைப் படையில் சேர்த்துக் கொள்வதை நிறுத்துவதற்கும் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் படையில் சேர்க்கப்பட்டுள்ள சிறுவர்களை மீண்டும் சமூகத்தில் இணைப்பதற்கான வசதிகளைச் செய்தல்.

✱ யுத்தம் காரணமாக உடல் ரீதியாக அல்லது மானசீக அங்கவீன நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள படைவீரர்கள் மற்றும் சாதாரண மக்களுக்குப் புனர்வாழ்வளித்தல்.

✱ அரசியல் தீர்வொன்றைக் காணும் மார்க்கத்தில் பொருத்தமான காலத்தில் முறையான சமமான மற்றும் யதார்த்தமாக யுத்த நிலைமையிலிருந்து சாதாரண நிலையை அடையும் இணக்கப்பாட்டினை அரசாங்கம் மற்றும் புலிகள் இயக்கத்திடையே ஏற்படுத்திக்கொள்ளல்.

# இ.தொ.காவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு திரும்பிய ஆறுமுகன் தொண்டமான், நேற்றுக்காலை காங்கிரஸ் தலைமையகத்தில் கட்சி முக்கியஸ்தர்களுடன் முக்கிய பேச்சுகளை நடத்தினார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட அவர், தற்போதைய அரசியல் சூழ்நிலைகளை விரிவாக ஆராய்ந்து வருவதால் கட்சியின் முடிவை ஓரிரு தினங்களில் அறிவிக்கக் கூடியதாக இருக்கும் என்று கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தை விரிவாகத் தாங்கள் ஆராய்ந்து வருகின்றார்கள் என்றும், தேவைப்படின் இரு பிரதான கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுகளை நடத்தத் தாங்கள் தயாரென்றும் கூறிய தொண்டமான், இதுவரை அப்படியான அழைப்பெதுவும் அத்தலைவர்களிடமிருந்து வரவில்லையென்றும் கூறினார். (க-3)

# பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிமால் திஸநாயக்க ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இந்த மனுவில் எதிர்மனுத்தாரர்களாக பொலீஸ்மா அதிபர், குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் லயனஸ் குணதிலக, குற்றப்புலனாய்வுப் பிரிவு இன்ஸ்பெக்டர் ஏ. அம்பாவில், பிரதமருக்கெதிராக 'ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை' விசாரணையை நடத்துமாறு முறைப்பாடு செய்திருந்த ஐ. தே. கட்சி எம். பியான கபீர் காஸீம், சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடவுள்ள நிலையில் தமக்கு அவதூறு ஏற்படுத்துவதற்காக திட்டமிட்டு இந்த விசாரணைகள் நடத்தப்படுவதாக பிரதமர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனு இன்று உயர் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளபடும்போது 'ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை' விசாரணைக்கு எதிராக இடைக்காலத் தடை விதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (க-3)

# பொம்மைவெளியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

தலையிலும், கையிலும் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. சடலத்துக்கு அருகில் 5 வெற்றுத் தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.நீதிமன்ற நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார். விசாரணைகளின் பின்னர் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லுமாறு அவர் உத்தரவிட்டார். (3-13)

# வேட்பு மனுத்தாக்கலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளார். அந்த ஒப்பந்தங்களில் உள்ள பல அம்சங்கள் சு.கவின் கொள்கைகளுக்கு அப்படியே - அடிப்படையிலேயே - முரண்பட்டவை. சு.க. சார்பில் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி வெளியிடப்படக் கூடிய தேர்தல் விஞ்ஞாபனம் நிச்சயம் சு.கவின் கொள்கைகளையே பிரதிபலிக்கும். அதில் ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றுடன் பிரதமர் கண்ட உடன்பாட்டு அம்சங்கள் நிச்சயம் நிராகரிக்கப்பட்டிருக்கும் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பு மனுத்தாக்கலுக்கு முன்னர் அத்தகைய விஞ்ஞாபனம் வெளிவந்தால் பிரதமருடன் உடன்பாடு செய்துள்ள ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. போன்றவை பிரதமருடனும், சு.கவுடனும் முரண்பாடு கொள்ளவும், சில சமயங்களில் பிரதமர் மஹிந்தவுக்கு எதிராகத் தேர்தலில் தங்களின் வேட்பாளரை நிறுத்த முயற்சிக்கவும் நேரலாம் என்று கூறப்படுகின்றது.

இத்தகைய இக்கட்டைத் தவிர்க்கவே வேட்பு மனுத் தாக்கல் செய்யும் காலம் முடிவுற்ற பின்னர் தனது விஞ்ஞாபனத்தை வெளியிட சுதந்திரக் கட்சி தீர்மானித்ததாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (க-3)


வெளிவந்துவிட்டது
Information Technology 2005/2006
J.Pratheepan B.Sc (Hons)
Lecturer in Information Technology
Sri Lanka Institute of Advanced Technical Education
தொடர்பு: 0779586866

Softview Computer College
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170, 0777846811
புதிய பிரிவுகள் ஆரம்பம் :- 01.10.2005
Dip. in Microsoft Office
Dip. in Desktop Publishing
Dip. in Computer Programming
Dip. in Hardware Engineering
Dip. in Network Engineering
Dip. in Visual Basic
Dip. in Computer Science
Dip. in AutoCAD
Dip. in C++
Dip. in Internet E-Mail
உங்கள் பதிவுகளை இன்றே முன்பதிவு செய்து கொள்ளுங்கள்
இப்பிரிவிற்கு மட்டும் பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

Mobile நடமாடும் Service சேவை
PC REPAIRS


உங்கள்அலுவலகத்திற்கு / வீட்டிற்கு வந்து உங்கள் கணனிகளை உடன் திருத்தித் தரப்படும்
அழையுங்கள்
MICRO PC SYSTEMS
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536

சிறப்புச் சலுகைக் கட்டணத்தில்
✱ VHS to DVD (690/=)
✱ DVD to DVD
✱ VHS to VCD (290/=)
✱ VHS to VHS
2 வாரங்களுக்கு ஒரு தடவை வெளிவரும் புத்தம் புதிய MP3
VCD Songs,MP3,ACD,Software CDs,Comedy CDs,Cartoons, Clip Arts, Learning CDs அனைத்தும் ரைட் செய்தவை 60/= மட்டுமே
கிராபிக்ஸ் டிசைனிங் செய்வோருக்கான CD இறுகள்.
STR 81, Palaly Road, Kantharmadam, Jaffna. T.P.: 077 3564242
(40508)

பார்த்தீர்களா! பார்த்தீர்களா!!
ஈசுர விநாயகரின் வெளியீடு: (6) 01.01.1994
பொங்கும் தமிழன் விடுதலை பொலிவுகண்டு எதிரிஏங்கிட வந்திடு! வந்திடு!!
~ சோழியூரான் பிறைசூடிக்குரு.

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.